VISIT…

PAnjchAli capatham

mahakavi cupramaNiya bArathiyAr

பாஞ்சாலி சபதம்

மஹாகவி சுப்பிரமணிய பாரதியார்

Etext input, proof reading and supplementary material- Mr. Harikrishnan, Chennai.

Proof reading and etext conversion: Dr. V. Venkataramanan, Tokyo, Japan.

This Etext file has the verses in tamil script in TSCII-encoding. So you need to have a TSCII conformant tamil font to view the Tamil part properly. Several TSCII conformant fonts are available free for use on Macintosh , Unix and Windows (95/98/NT/3.11) platforms at the following websites:

http://www.tamil.net/tscii/
http://www.geocities.com/Athens/5180/tsctools.html

In case of difficulties send an email request to kalyan@geocities.com

© Project Madurai 2001

Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet. Details of Project Madurai are available at the website http://www.tamil.net/projectmadurai

You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

மின்னுரையாக்கம், பிழைதிருத்தம், நூலிடை விளக்கக் குறிப்புகள் - திரு ஹரிகிருஷ்ணன், சென்னை.

பிழைதிருத்தமும் மின்னுரையாக்கமும் : முனைவர். வெங்கடரமணன், தோக்கியோ, ஜப்பான்

இம்மின்னுரை தகுதர தமிழெழுத்துக்களிலாக்கப் பெற்றது. எனவே, இதனைப் படிக்க தங்களுக்கு தகுதர தமிழ் எழுத்துரு தேவை. பல்வேறு கணனி இயக்குதளங்களுக்கு தகுதர எழுத்துக்கள் இலவசமாகக் கிடைக்கின்றன. இவற்றைப் பின்வரும் வலையகங்களில் ஏதாவதொன்றிலிருந்து தங்களால் தருவிக்கவியலும்.

http://www.tamil.net/tscii/
http://www.geocities.com/Athens/5180/tsctools.html

மேலதிக உதவிக்குத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி kalyan@geocities.com, kumar@vt.edu

© மதுரைத் திட்டம் 2001

மதுரைத் திட்டம் தமிழ்ச் செவ்விலக்கியங்களை மின்னுரைவடிவில், தளையின்றி ஊடுவலையின் மூலம் பரப்பும் ஒரு திறந்த, தன்னார்வ, உலகளாவிய முனைப்பாகும். இத்திட்டம் குறித்த மேலதிக விபரங்களைப் பின்வரும் வலையகத்திற் காணலாம். http://www.tamil.net/projectmadurai

இம்மின்னுரையை, இம்முகப்புப் பக்கத்திற்கு மாற்றமின்றி, தாங்கள் எவ்வழியிலும் பிரதியாக்கமோ, மறுவெளியீடோ செய்யலாம்.

ஓம் சக்தி

பாஞ்சாலி சபதம்

முதற் பாகம்

ஓமெனப் பெரியோர்கள் - என்றும்
ஓதுவதாய் - வினை - மோதுவதாய்
தீமைகள் மாய்ப்பதுவாய் - துயர்
தேய்ப்பதுவாய் - நலம் - வாய்ப்பதுவாய்
நாமமும் உருவுமற்றே - புந்தி
நாடரிதாய் - மனம் - தேடரிதாய்
ஆமெனும் பொருள் அனைத்தாய் - வெறும்
அறிவுடன் ஆனந்த இயல்புடைத்தாய் (1)

நின்றிடும் பிரமம் என்பார் - அந்த
நிர்மலப் பொருளினை சிந்தை செய்வேன்
நன்றுசெய் தவம்யோகம் - சிவ
ஞானமும் பக்தியும் நணுகிடவே
வென்றிகொள் சிவசக்தி - எனை
மேவுறவே இருள் சாவுறவே
இன்றமிழ் நூலிதுதான் - புகழ்
ஏய்ந்தினிதாய் என்றும் இலகிடவே. (2)

சரஸ்வதி வணக்கம்

வெள்ளைக் கமலத்திலே - அவள்
வீற்றிருப்பாள் புகழ் ஏற்றிருப்பாள்
கொள்ளைக் கனிஇசைதான் நன்கு
கொட்டுநல் யாழினைக் கொண்டிருப்பாள்.
கள்ளைக் கடலமுதை - நிகர்
கண்டதொர் பூந்தமிழ்க் கவிசொலவே
பிள்ளைப் பருவத்திலே - எனைப்
பேணவந்தாள் அருள் பூணவந்தாள். (3)

வேதத் திருவிழியாள் - அதில்
மிக்கபல் உரையெனும் கருமையிட்டாள்.
சீதக் கதிர்மதியே - நுதல்
சிந்தனையே குழல் என்றுடையாள்.
வாதத் தருக்கமெனும் - செவி
வாய்ந்த நற்றுணிவெனும் தோடணிந்தாள்.
போதமென் நாசியினாள் - நலம்
பொங்குபல் சாத்திர வாயுடையாள். (4)

கற்பனைத் தேனிதழாள் - சுவைக்
காவிய மெனுமணிக் கொங்கையினாள்.
சிற்பமுதற் கலைகள் - பல
தேமலர்க் கரமெனத் திகழ்ந்திருப்பாள்.
சொற்படு நயமறிவார் - இசை
தோய்ந்திடத் தொகுப்பதின் சுவையறிவார்
விற்பனத் தமிழ்ப்புலவோர் - அந்த
மேலவர் நாவெனும் மலர்ப்பதத்தாள். (5)

வாணியைச் சரண்புகுந்தேன் - அருள்
வாக்களிப்பாள் எனத்திடமிகுந்தேன்.
பேணிய பெருந்தவத்தாள் - நிலம்
பெயரளவும் பெயர் பெயராதாள்.
பூணியல் மார்பகத்தாள் - ஐவர்
பூவை திரௌபதி புகழ்க்கதையை
மாணியல் தமிழ்ப்பாட்டால் - நான்
வகுத்திடக் கலைமகள் வாழ்த்துகவே! (6)

நூல்

அத்தின புரமுண்டாம் - இவ்
அவனியிலே அதற்கிணையிலையாம்.
பத்தியில் வீதிகளாம் - வெள்ளைப்
பணிவரைபோற் பலமாளிகையாம்
முத்தொளிர் மாடங்களாம் - எங்கு
மொய்த்துஅளி சூழ்மலர்ச் சோலைகளாம்.
நத்தியல் வாவிகளாம் - அங்கு
நாடும் இரதிநிகர் தேவிகளாம். (7)

நத்து - சங்கு, வாவி - நீர் நிலை

அந்தணர் வீதிகளாம் - மறை
ஆதிகளாம் கலைச் சோதிகளாம்
செந்தழல் வேள்விகளாம் - மிகச்
சீர்பெறும் சாத்திரக் கேள்விகளாம்
மந்திர கீதங்களாம் - தர்க்க
வாதங்களாம் தவ நீதங்களாம்
சிந்தையில் அறமுண்டாம் - எனில்
சேர்ந்திடும் கலிசெயு மறமுமுண்டாம். (8)

நீதம் - நீதி, பாக்கியம், தகுதி.

மெய்த்தவர் பலருண்டாம் - வெறும்

வேடங்கள் பூண்டவர் பலருமுண்டாம்.
உய்த்திடு சிவஞானம் - கனிந்
தோர்ந்திடு மேலவர் பலருமுண்டாம்.
பொய்த்த இந்திரசாலம் - நிகர்
பூசையும் கிரியையும் புலைநடையும்
கைத்திடு பொய்ம்மொழியும் - கொண்டு
கண்மயக்கால் பிழைப்போர் பலராம். (9)

மாலைகள் புரண்டசையும் - பெரு
வரையெனத் திரண்டவன் தோளுடையார்
வேலையும் வாளினையும் - நெடு
வில்லையும் தண்டையும் விரும்பிடுவார்.
காலையும் மாலையிலும் - பகை
காய்ந்திடு தொழில்பல பழகிவெம்போர்
நூலையும் தேர்ச்சி கொள்வார் - கரி
நூறினைத் தனிநின்று நொறுக்கவல்லார். (10)

ஆரிய வேன்மறவர் - புவி
ஆளுமொர் கடுந்தொழில் இனிதுணர்ந்தோர்.
சீரியல் மதிமுகத்தார் - மணித்
தேனிதழ் அமுதென நுகர்ந்திடுவார்.
வேரியங் கள்ளருந்தி - எங்கும்
வெம்மத யானைகள் எனத்திரிவார்.
பாரினில் இந்திரர்போல் - வளர்
பார்த்திவர் வீதிகள் பாடுவமே. (11)

வேரி - தேன்

நல்லிசை முழக்கங்களாம் - பல
நாட்டிய மாதர்தம் பழக்கங்களாம்
தொல்லிசைக் காவியங்கள் - அருந்
தொழிலுணர் சிற்பர்செய் ஓவியங்கள்
கொல்லிசை வாரணங்கள் - கடுங்
குதிரைக ளொடுபெருந் தேர்களுண்டாம்.
மல்லிசை போர்களுண்டாம் - திரள்
வாய்ந்திவை பார்த்திடு வோர்களுண்டாம். (12)

மல்லிசை போர் - குத்துச் சண்டை

எண்ணரு மணிவகையும் - இவை
இலகிநல் ஒளிதரும் பணிவகையும்
தண்ணறுஞ் சாந்தங்களும் - மலர்த்
தார்களும் மலர்விழிக் காந்தங்களும்
சுண்ணமு நறும்புகையும் - சுரர்

துய்ப்பதற் குரியபல் பண்டங்களும்
உண்ணநற் கனிவகையும் - களி
உவகையும் கேளியும் ஓங்கினவே. (13)

சிவனுடை நண்பனென்பார் - வட
திசைக்கதிபதி அளகேசனென்பார்
அவனுடைப் பெருஞ்செல்வம் - இவர்
ஆவணந்தொறும் புகுந்திருப்பதுவாம்.
தவனுடை வணிகர்களும் - பல
தரனுடைத் தொழில்செயும் மாசனமும்
எவனுடைப் பயமுமிலா - தினி(து)
இருந்திடும் தன்மைய தெழில்நகரே. (14)

அளகேசன் - குபேரன்

துரியோதனன் சபை*

கன்னங் கரியதுவாய் - அகல்
காட்சியதாய் மிகு மாட்சியதாய்
துன்னற் கினியதுவாய் - நல்ல
சுவைதரு நீருடை யமுனையெனும்
வன்னத் திருநதியின் - பொன்
மருங்கிடைத் திகழ்ந்தவம் மணிநகரில்
மன்னவர் தம்கோமான் - புகழ்
வாளரவக் கொடி உயர்த்துநின்றான். (15)

*இக் கிளைத்தலைப்பு பாரதியால் தரப்பட்டதன்று. பாரதி பிரசுரம் பின்னாளில் தந்தது.

துரியோதனப் பெயரான் - நெஞ்சந்
துணிவுடையான் முடி பணிவறியான்
கரியோர் ஆயிரத்தின் - வலி
காட்டிடு வோன்என்றந்தக் கவிஞர்பிரான்
பெரியோன் வேதமுனி - அன்று
பேசிடும் படிதிகழ் தோள்வலியோன்
உரியோர் தாமெனினும் - பகைக்
குரியோர் தமக்குவெந் தீயனையான். (16)

தந்தைசொல் நெறிப்படியே - இந்தத்
தடந்தோள் மன்னவன் அரசிருந்தான்
மந்திரம் உணர்பெரியோர் - பலர்
வாய்த்திருந் தாரவன் சபைதனிலே
அந்தமில் புகழுடையான் - அந்த
ஆரிய வீட்டுமன் அறமறிந்தோன்
வந்தனை பெறுங்குரவோர் - பழ

மறைக்குல மறவர்கள் இருவரொடே, (17)

மறைக்குல மறவர் - கிருபர், துரோணர்

மெய்ந்நெறி உணர்விதுரன் - இனி
வேறுபல் லமைச்சரும் விளங்கிநின்றார்
பொய்நெறித் தம்பியரும் - அந்தப்
புலைநடைச் சகுனியும் புறமிருந்தார்
மைந்நெறி வான்கொடையான் - உயர்
மானமும் வீரமு மதியுமுளோன்
உய்ந்நெறி யறியாதான் - இறைக்
குயிர்நிகர்க் கன்னனும் உடனிருந்தான். (18)

வேறு

எண்ணிலாத பொருளின் குவையும்
யாங்கணும் செல்லும் சக்கர மாண்பும்
மண்ணிலார்க்கும் பெறலரிதாமோர்
வார்கடற் பெருஞ்சேனையும் ஆங்கே
விண்ணி லிந்திரன் துய்ப்பன போன்று
வேண்டும் இன்பமும் பெற்றவ னேனும்
கண்ணி லாத்திரி தராட்டிரன் மைந்தன்
காய்ந்த நெஞ்சுடன் எண்ணுவ கேளீர். (19)

வேறு

பாண்டவர் முடியுயர்த்தே - இந்தப்
பார்மிசை உலவிடு நாள்வரைநான்
ஆண்டதொர் அரசாமோ - என
தாண்மையும் புகழுமொர் பொருளாமோ
காண்டகு வில்லுடையான் - அந்தக்
காளையருச்சுனன் கண்களிலும்
மாண்டகு திறல் வீமன் - தட
மார்பிலும் எனதிகழ் வரைந்துளதே. (20)

பாரத நாட்டிலுள்ள - முடிப்
பார்த்திவர் யார்க்குமொர் பதியென்றே
நாரதன் முதன்முனிவோர் - வந்து
நாட்டிடத் தருமனவ் வேள்விசெய்தான்
சோரனவ் வெதுகுலத்தான் - சொலுஞ்
சூழ்ச்சியும் தம்பியர் தோள்வலியும்
வீரமிலாத் தருமன் - தனை
வேந்தர்தம் முதலென விதித்தனவே. (21)

ஆயிர முடிவேந்தர் - பதி
னாயிரம் ஆயிரம் குறுநிலத்தார்
மாயிரும் திறை கொணர்ந்தே - அங்கு
வைத்ததொர் வரிசையை மறந்திடவோ
தூயிழை ஆடைகளும் - மணித்
தொடையலும் பொன்னுமோர் தொகைப்படுமோ
சேயிழை மடவாரும் - பரித்
தேர்களும் கொடுத்தவர் சிறுதொகையோ? (22)

ஆணிப்பொன் கலசங்களும் - ரவி
அன்னநல் வயிரத்தின் மகுடங்களும்
மாணிக்கக் குவியல்களும் - பச்சை
மரகதத் திரளுநன் முத்துக்களும்
பூணிட்ட திருமணிதாம் - பல
புதுப்புது வகைகளில் பொலிவனவும்
காணிக்கையாக் கொணர்ந்தார் - அந்தக்
காட்சியை மறப்பது மெளிதாமோ? (23)

நால்வகைப் பசும்பொன்னும் - ஒரு
நாலாயிர வகைப் பணக்குவையும்
வேல்வகை வில்வகையும் - அம்பு
விதங்களும் தூணியும் வாள்வகையும்
சூல்வகை தடிவகையும் - பல
தொனிசெயும் பறைகளும் கொணர்ந்துவைத்தே
பால்வகை மன்னவர்தாம் - அங்குப்
பணிந்ததை என்னுள மறந்திடுமோ? (24)

கிழவியர் தபசியர்போல் - பழங்
கிளிக்கதை படிப்பவன் பொறுமையென்றும்
பழவினை முடிவென்றும் - சொலிப்
பதுங்கிநிற் போன்மறத் தன்மையிலான்
வழவழத் தருமனுக்கோ - இந்த
மாநில மன்னவர் தலைமை தந்தார்
முழவினைக் கொடிகொண்டான் - புவி
முழுதையும் தனியே குடிகொண்டான். (25)

தம்பியர் தோள்வலியால் - இவன்
சக்கர வர்த்தியென் றுயர்ந்ததுவும்
வெம்பிடு மதகரியான்* - புகழ்
வேள்விசெய் தந்நிலை முழக்கியதும்
அம்புவி மன்னரெல்லாம் - இவன்
ஆணைதம் சிரத்தினில் அணிந்தவராய்
நம்பரும் பெருஞ்செல்வம் - இவன்
நலங்கிளர் சபையினில் பொழிந்ததுவும் (26)

*மதகரியாகிய நான் - துரியோதனன், தான் பாண்டவரின் வேள்வியில் அதைப் புகழ நேர்ந்தது குறித்துப் பொறுமுகிறான்.

எப்படிப் பொறுத்திடுவேன் - இவன்
இளமையின் வளமைகள் அறியேனோ?
குப்பைகொலோ முத்தும் - அந்தக்
குரைகடல் நிலத்தவர் கொணர்ந்து பெய்தார்
சிப்பியும் பவளங்களும் - ஒளி
திரண்டவெண் சங்கத்தின் குவியல்களும்
ஒப்பில் வைடூரியமும் - கொடுத்
தொதுங்கி நின்றார்இவன் ஒருவனுக்கே. (27)

மலைநாடுடைய மன்னர் - பல
மான் கொணர்ந்தார்புதுத் தேன்கொணர்ந்தார்
கொலைநால்வாய் கொணர்ந்தார் - மலைக்
குதிரையும் பன்றியும் கொணர்ந்துதந்தார்
கலைமான் கொம்புகளும் - பெரும்
களிறுடைத் தந்தமும் கவரிகளும்
விலையார் தோல்வகையும் - கொண்டு
மேலும்பொன் வைத்தங்கு வணங்கிநின்றார். (28)

நால்வாய் - நாலுகின்ற வாய். நாலுதல் - தொங்குதல். அதாவது தொங்குகின்ற வாயை உடைய விலங்கு - யானை.

செந்நிறத்தோல் கருந்தோல் - அந்தத்
திருவளர் கதலியின் தோலுடனே
வெந்நிறப் புலித்தோல்கள் - பல
வேழங்கள் ஆடுகள் இவற்றுடைத்தோல்
பன்னிற மயிருடைகள் - விலை
பகரரும் பறவைகள் விலங்கினங்கள்
பொன்னிறப் பாஞ்சாலி - மகிழ்
பூத்திடும் சந்தனம் அகில் வகைகள் (29)

கதலி - ஒருவகை மான் என்று குறிப்பெழுதுகிறார் பாரதி. இருபது அங்குலமே வளர்வதும், சேற்றிலே வாழ்வதுமாகிய ஒருவகை மான் என்று ஞானார்த்த தீபிகை சொல்வதாகப் பேராசிரியர் தி. வேணுகோபாலன் (நாகநந்தி) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

ஏலம் கருப்பூரம் - நறும்
இலவங்கம் பாக்கு நற்சாதிவகை
கோலம் பெறக்கொணர்ந்தே - அவர்
கொட்டி நின்றார் கரம் கட்டிநின்றார்.
மேலும் தலத்திலுள - பல

வேந்தர் அப்பாண்டவர் விழைந்திடவே
ஓலந்தரக் கொணர்ந்தே - வைத்த
தொவ்வென்றும் என்மனத் துறைந்ததுவே. (30)

மாலைகள் பொன்னும் முத்தும் - மணி
வகைகளில் புனைந்தவும் கொணர்ந்துபெய்தார்
சேலைகள் நூறு வன்னம் - பல
சித்திரத் தொழில்வகை சேர்ந்தனவாய்
சாலவும் பொன்னிழைத்தே - தெய்வத்
தையலர் விழைவன பலர்கொணர்ந்தார்
கோலநற் பட்டுக்களின் - வகை
கூறுவதோ? எண்ணில் ஏறுவதோ? (31)

கழல்களும் கடகங்களும் - மணிக்
கலசமு மகுட முங் கணக்கிலவாம்
நிழல்நிறப் பரிபலவும் - செந்
நிறத்தன பலவும்வெண் ணிறம் பலவும்
தழல்நிறம் மேகநிறம் - விண்ணில்
சாரும் இந்திர வில்லை நேருநிறம்
அழகிய கிளிவயிற்றின் - வண்ணம்
ஆர்ந்தனவாய்ப் பணி சேர்ந்தனவாய். (32)

(சூரியனின் தேரில் பூட்டப் பட்டகுதிரைகள் பச்சை வண்ணமுடையவை.)

காற்றெனச் செல்வனவாய் - இவை
கடி(து)உகைத்திடும் திறல் மறவரொடே
போற்றிய கையினராய்ப் - பல
புரவலர் கொணர்ந்தவன் சபைபுதுந்தார்.
சீற்றவன் போர்யானை - மன்னர்
சேர்த்தவை பலபல மந்தையுண்டாம்
ஆற்றல் மிலேச்ச மன்னர் - தொலை
அரபியர் ஒட்டைகள் கொணர்ந்து தந்தார். (33)

உகைத்தல் - செலுத்துதல். மிலேச்சர் - அன்னியர், வெளிநாட்டவர். இங்கே அரபியர், பாரசீகர் என்பது பொருந்தும். தாய்த்திரு நாட்டைத் தறுகண் மிலேச்சர்.... என்று சத்திரபதி சிவாஜி தன் சைனியத்திற்குக் கூறியது என்ற பாடலில் பாரதி சொல்லியிருப்பதைக் கவனிக்கவும்.

தென்திசைச் சாவகமாம் - பெரும்
தீவுதொட்டே வடதிசை யதனில்
நின்றிடும் புகழ்ச்சீனம் - வரை
நேர்ந்திடும் பலபல நாட்டினரும்
வென்றிகொள் தருமனுக்கே - அவன்
வேள்வியில் பெரும்புகழ் விளையும்வண்ணம்

நன்றுபல் பொருள் கொணர்ந்தார் - புவி
நாயகன் யுதிட்டிரன்என உணர்ந்தார். (34)

சாவகம் - ஜாவா

ஆடுகள் சிலர் கொணர்ந்தார் - பலர்
ஆயிரமாயிரம் பசுக் கொணர்ந்தார்.
மாடுகள் பூட்டினவாய் - பல
வகைப்படு தானியஞ் சுமந்தனவாய்
ஈடுறு வண்டிகொண்டே - பலர்
எய்தினர்; கரும்புகள் பலர்கொணர்ந்தார்
நாடுறு தயிலவகை - நறு
நானத்தின் பொருள் பலர் கொணர்ந்துதந்தார். (35)

நானம் - கஸ்தூரி

நெய்க்குடம் கொண்டுவந்தார் - மறை
நியமங்கொள் பார்ப்பனர் மகத்தினுக்கே
மொய்க்கும்இன் கள்வகைகள் - கொண்டு
மோதினர் அரசினர் மகிழ்வுறவே
தைக்குநற் குப்பாயம் - செம்பொன்
சால்வைகள் போர்வைகள் கம்பளங்கள்
கைக்கு மட்டிலுந்தானோ - அவை
காண்பவர் விழிகட்கும் அடங்குபவோ? (36)

மகம் - வேள்வி. குப்பாயம் - சட்டை

தந்தத்தில் கட்டில்களும் - நல்ல
தந்தத்தில் பல்லக்கும் வாகனமும்
தந்தத்தின் பிடிவாளும் - அந்தத்
தந்தத்திலே சிற்பமும் தொழில்வகையும்
தந்தத்தில் ஆதனமும் - பின்னும்
தமனிய மணிகளில் இவையனைத்தும்
தந்தத்தைக் கணக்கிடவோ - முழுத்
தரணியின் திருவுமித் தருமனுக்கோ? (37)

தமனியம் - பொன்

வேறு

(கட்டளைக் கலிப்பா - ஓரடிக்கு இருபது எழுத்துக்கள் - நேர் இருபது, நிரை இருபத்தொன்று)

என்றிவ் வாறு பலபல எண்ணி

ஏழை யாகி இரங்குத லுற்றான்
வன்தி றத்தொரு கல்லெனும் நெஞ்சன்
வானம் வீழினும் அஞ்சுத லில்லான்*
குன்றம் ஒன்று குழைவுற் றிளகிக்
குழம்பு பட்டழி வெய்திடும் வண்ணம்
கன்று பூதலத் துள்ளுறை வெம்மை
காய்ந்தெ ழுந்து வெளிப்படல் போல (38)

* உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்...

நெஞ்சத் துள்ளோர் பொறாமை எனும்தீ
நீள்வதால் உள்ள நெக்குரு கிப்போய்
மஞ்சன் ஆண்மை மறம்திண்மை மானம்
வன்மை யாவும் மறந்தனன் ஆகி
பஞ்சை யாம்ஒரு பெண்மகள் போலும்
பாலர் போலும் பரிதவிப்பானாய்க்
கொஞ்ச நேரத்தில் பாதகத் தோடு
கூடி யேயுற வெய்திநின் றானால். (39)

யாது நேரினும் எவ்வகை யானும்
யாது போயினும் பாண்டவர் வாழ்வைத்
தீது செய்து மடித்திட எண்ணிச்
செய்கை ஒன்றறி யான்திகைப் பெய்திச்
சூதும் பொய்யும் உருவெனக் கொண்ட
துட்ட மாமனைத் தான்சரண் எய்தி
ஏது செய்வம் எனச்சொல்லி நைந்தான்
எண்ணத் துள்ளன யாவையும் உரைத்தே. (40)

மன்னர் மன்னன் யுதிட்டிரன் செய்த
மாம கத்தினில் வந்து பொழிந்த
சொன்னம் பூண்மணி மற்றிவை கண்டும்
தோற்றம் கண்டு மதிப்பினைக் கண்டும்
என்ன பட்டது தன்உளம் என்றே
ஈன மாமன் அறிந்திடும் வண்ணம்
முன்னம் தான்நெஞ்சிற் கூறியஎல்லாம்
மூடன் பின்னும் எடுத்து மொழிந்தான். (41)

வேறு

உலகு தொடங்கிய நாள் முதலாநம் சாதியில் - புகழ்
ஓங்கிநின்றார் இத்தருமனைப் போலெவர் - மாமனே
இலகு புகழ்மனுவாதி முதுவர்க்கு மாமனே - பொருள்
ஏற்றமும் மாட்சியும்இப்படி உண்டுகொல் - மாமனே
கலைகள் உணர்ந்தநல் வேதியர் பாவலர் செய்தவாம் - பழங்

கற்பனைக் காவியம் பற்பல கற்றனை மாமனே
பலகடல் நாட்டையும் இப்படி வென்றதை எங்கணும் - சொல்லப்
பார்த்த துண்டோ கதை கேட்டதுண்டோ புகல் மாமனே (42)

எதனை உலகில் மறப்பினும் யான்இனி மாமனே - இவர்
யாகத்தை என்று மறந்திடல் என்பதேதுகாண்
விதமுறச் சொன்ன பொருட்குவையும் பெரிதில்லைகாண் - அந்த
வேள்வியில் என்னை வெதுப்பின வேறு பலவுண்டே
இதனை எலாம்அவ் விழியற்ற தந்தையின் பால்சென்றே - சொல்லி
இங்கிவர் மீதவனும் பகைஎய்திடச் செய்குவாய்
மிதமிகும் அன்பவர் மீதுகொண்டான் அவன் கேட்கவே - அந்த
வேள்வி கண்டென்னுயிர் புண்படுஞ் செய்தி விளம்புவாய், (43)

கண்ணைப் பறிக்கும் அழகுடையார் இளமங்கையர் - பல
காமரு பொன்மணிப் பூண்கள் அணிந்தவர் தம்மையே
மண்ணைப் புரக்கும் பாவலர் தாமந்த வேள்வியில் - கொண்டு
வாழ்த்தி அளித்தனர் பாண்டவர்க்கே எங்கள் மாமனே
எண்ணைப் பழிக்கும் தொகையுடையார் இள மஞ்சரைப் - பலர்
ஈந்தனர் மன்னர் இவர்தமக்குத் தொண்டியற்றவே.
விண்ணைப் பிளக்கும் தொனியுடைய சங்குகள் ஊதினார் - தெய்வ
வேதியர் மந்திரத்தோடுபல் வாழ்த்துக்கள் ஓதினார். (44)

காமரு-விரும்பத்தக்க (*காமரு பூங்கச்சி மணிவண்ணா - மதுர கவியாழ்வார்) மஞ்சன் - மைந்தன், ஆண்மகன், மைத்துனன்

நாரதன் தானுமவ் வேதவியசனு மாங்ஙனே - பலர்
நானிங் குரைத்தற் கரியபெருமை முனிவரும்
மாரத வீரரப் பாண்டவர் வேள்விக்கு வந்ததும் - வந்து
மாமறை யாசிகள் கூறிப் பெரும்புகழ் தந்ததும்
வீரர்தம் போரினரிய நற் சாத்திர வாதங்கள் - பல
விப்பிரர் தம்முள் விளைத்திட உண்மைகள் வீசவே
சாரமறிந்த யுதிட்டிரன் கேட்டு வியந்ததும் - நல்ல
தங்க மழைபொழிந் தாங்கவர்க் கேமகிழ் தந்ததும் (45)

விப்பிரர் - அந்தணர்

விப்பிரர் ஆதிய நால்வருணத்தவர் துய்ப்பவே - நல்
விருந்து செயலில் அளவற்ற பொன்செல விட்டதும்
இப்பிறவிக்குள் இவைஒத்த வேள்வி விருந்துகள் - புவி
எங்கணு நாம்கண்டதில்லை எனத்தொனி பட்டதும்
தப்பின்றியே நல்விருந்தினர் யார்க்கும் தகுதிகள் - கண்டு
தக்க சன்மானம் அளித்து வரிசைகள் இட்டதும்
செப்புக நீஅவ் விழியற்ற தந்தைக்கு நின்மகன் - இந்தச்

செல்வம் பெறாவிடில் செத்திடுவான் என்றுஞ் செப்புவாய். (46)

அண்ணன் மைந்தன் அவனிக் குரியவன் யானன்றோ - அவர்
அடியவ ராகிஎமைப் பற்றி நிற்றல் விதியன்றோ?
பண்ணும் வேள்வியில் யார்க்கு முதன்மை அவர்தந்தார் - அந்தப்
பாண்டவர் நம்மைப் புல்லென எண்ணுதல் பார்த்தையோ-
கண்ணனுக்கு முதலுப சாரங்கள் காட்டினார் - சென்று
கண்ணிலாத் தந்தைக்கு இச்செயலின் பொருள் காட்டுவாய்
மண்ணில் வேந்தருட் கண்ணனெவ்வாறு முதற்பட்டான் - என்றன்
மாமனே அவன்நம்மில் உயர்ந்த வகை சொல்வாய். (47)

சந்திர குலத்தே பிறந்தோர்தம் தலைவன்யான் - என்று
சகமெலம் சொலும் வார்த்தைமெய்யோ வெறும் சாலமோ?
தந்திரத் தொழில்உணரும் சிறுவேந்தனை - இவர்
தரணி மன்னருள் முற்பட வைத்திடல் சாலுமோ?
மந்திரத்தில் அச்சேதியர் மன்னனை மாய்த்திட்டார் - ஐய
மாமகத்தில் அதிதியைக் கொல்ல மரபுண்டோ?
இந்திரத்துவம் பெற்றிவர் வாழு நெறிநன்றே! - இதை
எண்ணிஎண்ணி என்நெஞ்சு கொதிக்குது மாமனே. (48)

சேதியர் மன்னன் - சிசுபாலன்

சதிசெய்தார்க்குச் சதிசெயல் வேண்டும்என் மாமனே - இவர்
தாம்என் அன்பன் சராசந்தனுக்கு முன்எவ்வகை
விதிசெய்தார் அதைஎன்றும் என்னுள்ள மறக்குமோ? - இந்த
மேதினியோர்கள் மறந்துவிட்டார் இஃதோர் விந்தையே!
நிதிசெய்தாரைப் பணிகுவர் மானிடர் மாமனே - எந்த
நெறியினால் அது செய்யினும் நீள்புவி
துதிசெய்தே அடிநக்குதல் கண்டனை மாமனே - வெறும்
சொல்லுக்கே அறநூல்கள் உரைக்கும் துணிவெல்லாம். (49)

துணிவு - முடிவு

வேறு

பொற்றடந் தேரொன்று வாலிகன் கொண்டு விடுத்ததும் - அதில்
பொற்கொடி சேதியர் கோமகன் வந்துதொடுத்ததும்
உற்றதோர் தம்பிக்குத் தென்னவன் மார்பணி தந்ததும் - ஒளி
ஓங்கிய மாலைஅம் மாகதன்தான் கொண்டு வந்ததும்
பற்றலர் அஞ்சும் பெரும்புகழ் ஏகலவியனே - செம்பொன்
பாதுகை கொண்டு யுதிட்டிரன் தாளினில் ஆர்த்ததும்
முற்றிடும் அஞ்சனத்திற்குப் பலபல தீர்த்தங்கள் - மிகு
மொய்ம்புடையான் அவ்அவந்தியர்மன்னவன் சேர்த்ததும் (50)

மஞ்சன நீர்தவ வேதவியாசன் பொழிந்ததும் - பல
வைதிகர் கூடிநன் மந்திர வாழ்த்து மொழிந்ததும்
குஞ்சரச் சாத்தகி வெண்குடை தாங்கிட வீமனும் - இளங்
கொற்றவனும் பொற்சிவிறிகள் வீச இரட்டையர்
அஞ்சுவர் போலங்கு நின்று கவரியிரட்டவே - கடல்
ஆளுமொருவன் கொடுத்ததொர் தெய்விகச் சங்கினில்
வஞ்சகன் கண்ணன் புனிதமுறுங் கங்கை நீர்கொண்டு - திரு
மஞ்சனம் ஆட்டும்அப் போதில் எவரும் மகிழ்ந்ததும் (51)

சாத்தகி - சாத்யகி. கடல் ஆளுமொருவன் - வருணன்

மூச்சை யடைத்தடா! சபைதன்னில் விழுந்துநான் - அங்கு
மூர்ச்சை அடைந்தது கண்டனையே என்றன் மாமனே!
ஏச்சையும் அங்கவர் கொண்ட நகைப்பையும் எண்ணுவாய் - அந்த
ஏந்திழையாளும் எனைச்சிரித்தாள் இதை எண்ணுவாய்
பேச்சை வளர்த்துப் பயனொன்று மில்லைஎன் மாமனே - அவர்
பேற்றை அழிக்க உபாயம் சொல்வாய் என்றன் மாமனே!
தீச்செயல் நற்செயல் ஏதெனினும் ஒன்று செய்துநாம் - அவர்
செல்வங் கவர்ந்தவரை விடவேண்டும் தெருவிலே! (52)

சகுனியின் சதி

வேறு

என்று சுயோதனன் கூறியே - நெஞ்சம்
ஈர்ந்திடக் கண்ட சகுனிதான் - அட!
இன்று தருகுவன் வெற்றியே - இதற்
கித்தனை வீண்சொல் வளர்ப்பதேன்? - இனி
ஒன்றுரைப்பேன் நல்லுபாயந்தான் - அதை
ஊன்றிக் கருத்தொடு கேட்பையால் - ஒரு
மன்று புனைந்திடச் செய்திநீ - தெய்வ
மண்டபம் ஒத்த நலங்கொண்டே. (53)

மண்டபம் காண வருவிரென் - றந்த
மன்னவர் தம்மை வரவழைத் - தங்கு
கொண்ட கருத்தை முடிப்பவே - மெல்லக்
கூட்டிவன் சூது பொரச்செய்வோம் - அந்த
வண்டரை* நாழிகை யொன்றிலே - தங்கள்
வான்பொருள் யாவையுந் தோற்றுனைப் - பணி
தொண்டரெனச் செய்திடு வன்யான் - என்றன்
சூதின் வலிமை அறிவைநீ. (54)

*எல்லாப் பதிப்புகளிலும் வண்டரை என்றே காணப்பட்டாலும் வண்டறை என்றிருக்கலாம். (வண்டு சிறகறையும் நேரம்)

வெஞ்சமர் செய்திடுவோம் எனில் - அதில்
வெற்றியும் தோல்வியும் யார்கண்டார்? - அந்தப்
பஞ்சவர் வீரம் பெரிதுகாண் - ஒரு
பார்த்தன்கை வில்லுக்கு எதிருண்டோ? - உன்றன்
நெஞ்சத்தில் சூதை இகழ்ச்சியாக் - கொள்ள
நீதமில்லை முன்னைப் பார்த்திவர் - தொகை
கொஞ்ச மிலைப் பெருஞ்சூதினால் - வெற்றி
கொண்டு பகையை யழித்துளோர். (55)

நாடுங் குடிகளும் செல்வமும் - எண்ணி
நானிலத்தோர் கொடும் போர்செய்வார் - அன்றி
ஓடுங் குருதியைத் தேக்கவோ? - தமர்
ஊன்குவை கண்டு களிக்கவோ? - அந்த
நாடுங் குடிகளும் செல்வமும் - ஒரு
நாழிகைப் போதினில் சூதினால் - வெல்லக்
கூடும் எனில் பிறிதெண்ணலேன்? - என்றன்
கொள்கை யிதுஎனக் கூறினான். (56)

இங்கிது கேட்ட சுயோதனன் - மிக
இங்கிதஞ் சொல்லினை மாமனே! - என்று
சங்கிலிப் பொன்னின் மணியிட்ட - ஒளித்
தாமஞ் சகுனிக்குப் பூட்டினான் - பின்னர்
எங்கும் புவிமிசை உன்னைப்போல் - எனக்
கில்லை யினியது சொல்லுவோர் - என்று
பொங்கும் உவகையில் மார்புறக் - கட்டிப்
பூரித்து விம்மித் தழுவினான். (57)

தாமம் - மணிவடம், மாலை

சகுனி திருதிராட்டிரனிடம் சொல்லுதல்

மற்றதன் பின்னர் இருவரும் - அரு
மந்திரக் கேள்வி உடையவன் - பெரும்
கொற்றவர் கோன்திரி தாட்டிரன் - சபை
கூடி வணங்கி இருந்தனர் - அருள்
அற்ற சகுனியும் சொல்லுவான் - ஐய
ஆண்டகை நின்மகன் செய்திகேள் - உடல்
வற்றித் துரும்பொத் திருக்கிறான் - உயிர்
வாழ்வை முழுதும் வெறுக்கின்றான். (58)

உண்ப சுவையின்றி உண்கின்றான் - பின்

உடுப்ப திகழ உடுக்கின்றான் - பழ
நண்பர்க ளோடுஉற வெய்திடான் - இள
நாரியரைச் சிந்தை செய்திடான் - பிள்ளை
கண்பசலை கொண்டுபோயினான் - இதன்
காரணம் யாதென்று கேட்பையால் - உயர்
திண்பருமத் தடந் தோளினாய் - என்று
தீய சகுனியும் செப்பினான். (59)

தந்தையும் இவ்வுரை கேட்டதால் - உளம்
சாலவும் குன்றி வருந்தியே - என்றன்
மைந்த நினக்கு வருத்தமேன்? - இவன்
வார்த்தையில் ஏதும் பொருளுண்டோ - நினக்
கெந்த விதத்தும் குறையுண்டோ - நினை
யாரும் எதிர்த்திடு வார்உண்டோ? - நின்றன்
சிந்தையில் விரும்பும் பொருளெலாம் - கணம்
தேடிக்கொடுப்பவர் இல்லையோ? (60)

இன்னமு தொத்த உணவுகள் - அந்த
இந்திரன் வெஃகுறும் ஆடைகள் - பலர்
சொன்ன பணிசெயு மன்னவர் - வருந்
துன்பம் தவிர்க்கும் அமைச்சர்கள் - மிக
நன்னலம் கொண்ட குடிபடை - இந்த
நானில மெங்கும் பெரும்புகழ் - மிஞ்சி
மன்னும் அப்பாண்டவச் சோதரர் - இவை
வாய்ந்தும் உனக்குத் துயருண்டோ? (61)

தந்தை வசனம் செவியுற்றே - கொடி
சர்ப்பத்தைக் கொண்டதொர் கோமகன்
வெந்தழல் போலச் சினங் கொண்டே - தன்னை
மீறிப் பலசொல் விளம்பினான் - இவன்
மந்தமதி கொண்டு சொல்வதை - அந்த
மாமன் மறித்துரை செய்குவான் - ஐய,
சிந்தை வெதுப்பத்தினால் இவன் - சொலும்
சீற்ற மொழிகள் பொறுப்பையால். (62)

தன்னுளத் துள்ள குறையெலாம் - நின்றன்
சந்நிதியிற் சென்று சொல்லிட - முதல்
என்னைப் பணித்தனன் யானிவன் - தனை
இங்கு வலியக் கொணர்ந்திட்டேன் - பிள்ளை
நன்னயமே சிந்தை செய்கின்றான் - எனில்
நன்கு மொழிவ தறிந்திலன் - நெஞ்சைத்
தின்னும் கொடுந்தழல் கொண்டவர் - சொல்லும்
செய்தி தெளிய உரைப்பரோ? (63)

நீபெற்ற புத்திரனே அன்றோ - மன்னர்
நீதி இயல்பில் அறிகின்றான் - ஒரு
தீபத்தில் சென்று கொளுத்திய - பந்தம்
தேசு குறைய எரியுமோ? - செல்வத்
தாபத்தை நெஞ்சில் வளர்த்திடல் - மன்னர்
சாத்திரத்தே முதற் சூத்திரம் - பின்னர்
ஆபத்து அரசர்க்கு வேறுண்டோ - தம்மில்
அன்னியர் செல்வ மிகுதல்போல்? (64)

வேள்வியில் அன்றந்தப் பாண்டவர் - நமை
வேண்டுமட்டுங் குறை செய்தனர் - ஒரு
கேள்வி யிலாதுன் மகன்தனைப் - பலர்
கேலி செய்தே நகைத்தார் கண்டாய் - புவி
ஆள்வினை முன்னவர்க் கின்றியே - புகழ்
ஆர்ந்திளை யோர்அது கொள்வதைப் - பற்றி
வாள்விழி மாதரு நம்மையே - கய
மக்கள் என்றெண்ணி நகைத்திட்டார். (65)

ஆயிரம் யானை வலிகொண்டான் - உன்றன்
ஆண்டகை மைந்தன்இவன் கண்டாய் - இந்த
மாயிரு ஞாலத் துயர்ந்ததா - மதி
வான்குலத்திற்கு முதல்வனாம் - ஒளி
ஞாயிறு நிற்பவு மின்மினி - தனை
நாடித் தொழுதிடுந் தன்மைபோல்
வேயிருந்து ஊதுமொர் கண்ணனை - அந்த
வேள்வியில் சால உயர்த்தினார். (66)

வேய் - மூங்கில் (இங்கே புல்லாங்குழலுக்கு ஆகி வந்தது)

ஐயநின் மைந்தனுக்கு இல்லைகாண் - அவர்
அர்க்கிய முற்படத் தந்ததே - இந்த
வையகத் தார்வியப்பு எய்தவே - புவி
மன்னவர் சேர்ந்த சபைதனில் - மிக
நொய்யதொர் கண்ணனுக்கு ஆற்றினார் - மன்னர்
நொந்து மனங்குன்றிப் போயினர் - பணி
செய்யவும் கேலிகள் கேட்கவும் - உன்றன்
சேயினை வைத்தனர் பாண்டவர். (67)

பாண்டவர் செல்வம் விழைகின்றான் - புவிப்
பாரத்தை வேண்டிக் குழைகின்றான் - மிக
நீண்ட மகிதலம் முற்றிலும் - உங்கள்
நேமி செலும்புகழ் கேட்கின்றான் - குலம்
பூண்ட பெருமை கெடாதவாறு - எண்ணிப்
பொங்கு கின்றான்நலம் வேட்கின்றான் - மைந்தன்

ஆண்டகைக் கிஃது தகுமன்றோ? - இல்லை
யாமெனில் வைய நகுமன்றோ? (68)

நித்தம் கடலினில் கொண்டு போய் - நல்ல
நீரை அளவின்றிக் கொட்டுமாம் - உயர்
வித்தகர் போற்றிடும் கங்கையாறு - அது
வீணில் பொருளை அழிப்பதோ - ஒரு
சத்த மிலா நெடுங்காட்டினில் - புனல்
தங்கி நிற்குங்குளம் ஒன்றுண்டாம் - அது
வைத்த தன்னீரைப் பிறர்கொளா - வகை
வாரடைப் பாசியில் மூடியே (69)

சூரியன் வெப்பம் படாமலே - மரஞ்
சூழ்ந்த மலையடிக் கீழ்ப்பட்டே - முடை
நீரினை நித்தலும் காக்குமாம் - இந்த
நீள்சுனை போல்பவர் பலருண்டே - எனில்
ஆரியர் செல்வம் வளர்தற்கே - நெறி
ஆயிர நித்தம் புதியன - கண்டு
வாரிப் பழம்பொருள் எற்றுவார் - இந்த
வண்மையு நீயறி யாததோ? (70)

கள்ளச் சகுனியும் இங்கனே - பல
கற்பனை சொல்லித்தன் உள்ளத்தின் - பொருள்
கொள்ளப் பகட்டுதல் கேட்டபின் - பெரும்
கோபத் தொடேதிரிதாட்டிரன் - அட
பிள்ளையை நாசம் புரியவே - ஒரு
பேயென நீவந்து தோன்றினாய் - பெரு
வெள்ளத்தைப் புல்லொன் றெதிர்க்குமோ - இள
வேந்தரை நாம்வெல்ல லாகுமோ? (71)

சோதரர் தம்முள் பகையுண்டோ - ஒரு
சுற்றத்திலே பெருஞ் செற்றமோ - நம்மில்
ஆதரங் கொண்டவர் அல்லரோ - முன்னர்
ஆயிரஞ் சூழ்ச்சி இவன்செய்தும் - அந்தச்
சீதரன் தண்ணருளாலும்ஓர் - பெரும்
சீலத்தினாலும் புயவலி - கொண்டும்
யாதொரு தீங்கும் இலாமலே - பிழைத்
தெண்ணரும் கீர்த்தி பெற்றாரன்றோ? (72)

பிள்ளைப் பருவந் தொடங்கியே - இந்தப்
பிச்சன் அவர்க்குப் பெரும்பகை - செய்து
கொள்ளப் படாத பெரும்பழி - அன்றிக்
கொண்டதொர் நன்மை சிறிதுண்டோ - நெஞ்சில்
எள்ளத் தகுந்த பகைமையோ? - அவர்

யார்க்கும் இளைத்த வகையுண்டோ - வெறும்
நொள்ளைக் கதைகள் கதைக்கிறாய் - பழ
நூலின் பொருளைச் சிதைக்கிறாய். (73)

மன்னவர் நீதி சொலவந்தாய் - பகை
மாமலையைச் சிறு மட்குடம் - கொள்ளச்
சொன்னதொர் நூல்சற்றுக் காட்டுவாய் - விண்ணில்
சூரியன் போல்நிகரின்றியே - புகழ்
துன்னப் புவிச்சக்க ராதிபம் - உடற்
சோதரர் தாம்கொண்டிருப்பவும் - தந்தை
என்னக் கருதி அவரென்னைப் - பணிந்
தென்சொற் கடங்கி நடப்பவும் (74)

முன்னை இவன்செய்த தீதெலாம் - அவர்
முற்று மறந்தவ ராகியே - தன்னைத்
தின்ன வருமொர் தவளையைக் - கண்டு
சிங்கஞ் சிரித்தருள் செய்தல்போல் - துணை
என்ன இவனை மதிப்பவும் - அவர்
ஏற்றத்தைக் கண்டும் அஞ்சாமலே - (நின்றன்
சின்ன மதியினை என்சொல்வேன்) - பகை
செய்திட எண்ணிப் பிதற்றினாய். (75)

ஒப்பில் வலிமை உடையதாம் - துணை
யோடு பகைத்தல் உறுதியோ? - நமைத்
தப்பிழைத் தாரந்த வேள்வியில் - என்று
சாலம் எவரிடம் செய்கிறாய்? - மயல்
அப்பி விழிதடுமாறியே - இவன்
அங்குமிங் கும்விழுந் தாடல்கண் - டந்தத்
துப்பிதழ் மைத்துனி தான்சிரித் - திடில்
<u>தோம்</u> இதில்மிக வந்ததோ? (76)

தோம் - குற்றம் ("தோமிழைப் பார்முன் நின்றிடுங்கால் கொடுந் துர்க்கையனையவள் தாய்" - எங்கள் தாய் - பாரதி)

தவறி விழுந்தவர் தம்மையே - பெற்ற
தாயுஞ் சிரித்தல் மரபன்றோ - எனில்
இவனைத் துணைவர் சிரித்ததோர் - செயல்
எண்ணரும் பாதக மாகுமோ? - மனக்
கவலை வளர்த்திடல் வேண்டுவோர் - ஒரு
காரணம் காணுதல் கஷ்டமோ? - வெறும்
அவல மொழிகள் அளப்பதேன் - தொழில்
ஆயிரம் உண்டவை செய்குவீர். (77)

சின்னஞ் சிறிய வயதிலே - இவன்

தீமை அவர்க்குத் தொடங்கினான் - அவர்
என்னரும் புத்திரர் என்றெண்ணித் - தங்கள்
யாகத் திவனைத் தலைக்கொண்டு - பசும்
பொன்னை நிறைத்ததொர் பையினை - மனம்
போலச் செவவிடு வாயென்றே - தந்து
மன்னவர் காண இவனுக்கே - தம்முள்
மாண்பு கொடுத்தனர் அல்லரோ? (78)

கண்ணனுக் கேமுதல் அர்க்கியம் - அவர்
காட்டினர் என்று பழித்தனை - எனில்
நண்ணும் விருந்தினர்க் கன்றியே - நம்முள்
நாமுப சாரங்கள் செய்வதோ - உறவு
அண்ணனும் தம்பியும் ஆதலால் - அவர்
அன்னிய மாநமைக் கொண்டிலர் - முகில்
வண்ணன் அதிதியர் தம்முளே - முதல்
மாண்புடை யானெனக் கொண்டனர் (79)

கண்ணனுக் கேஅது சாலும்என்று - உயர்
கங்கை மைந்தன்சொலச் செய்தனர் - இதைப்
பண்ணரும் பாவமென் றெண்ணினால் - அதன்
பாரம் அவர்தமைச் சாருமோ? - பின்னும்
கண்ணனை யாரெனக் கொண்டனை - அவன்
காலிற் சிறுதுகள் ஒப்பவர் - நிலத்(து)
எண்ணரு மன்னவர் தம்முளே - பிறர்
யாரும் இலையெனல் காணுவாய். (80)

ஆதிப் பரம்பொருள் நாரணன் - தெளி
வாகிய பாற்கடல் மீதிலே - நல்ல
சோதிப் பணாமுடி ஆயிரம் - கொண்ட
தொல்லறி வென்னுமோர் பாம்பின்மேல் - ஒரு
போதத் துயில்கொளு நாயகன் - கலை
போந்து புவிமிசை தோன்றினான் - இந்தச்
சீதக் குவளை விழியினான் - என்று
செப்புவர் உண்மை தெரிந்தவர். (81)

நானெனும் ஆணவம் தள்ளலும் - இந்த
ஞாலத்தைத் தானெனக் கொள்ளலும் - பர
மோன நிலையில் நடத்தலும் - ஒரு
மூவகைக் காலம் கடத்தலும் - நடு
வான கருமங்கள் செய்தலும் - உயிர்
யாவிற்கு நல்லருள் பெய்தலும் - பிறர்
ஊனைச் சிதைத்திடு போதிலும் - தன
துள்ளம் அருளின் நெகுதலும் (82)

ஆயிரங் கால முயற்சியால் - பெறல்
ஆவர்இப் பேறுகள் ஞானியர் - இவை
தாயின் வயிற்றிற் பிறந்தன்றே - தமைச்
சார்ந்து விளங்கப் பெறுவரேல் - இந்த
மாயிரு ஞாலம் அவர்தமைத் - தெய்வ
மாண்புடை யாரென்று போற்றுங்காண் - ஒரு
பேயினை வேதம் உணர்த்தல்போல் - கண்ணன்
பெற்றி உனக்கெவர் பேசுவார்? (83)

வேறு

(கட்டளைக் கலிப்பா - ஓரடிக்கு இருபது எழுத்துக்கள் - நேர் இருபது, நிரை இருபத்தொன்று)

வெற்றி வேற்கைப் பரதர்தம் கோமான்
மேன்மை கொண்ட விழிஅகத்துள்ளோன்
பெற்றி மிக்க விதுரன் அறிவைப்
பின்னு மற்றொரு விழியெனக் கொண்டோன்
முற்றுணர் திரி தாட்டிரன் என்போன்
மூடப் பிள்ளைக்கு மாமன்சொல் வார்த்தை
எற்றி நல்ல வழக்குரை செய்தே
ஏன்ற வாறு நயங்கள் புகட்ட (84)

கொல்லு நோய்க்கு மருந்துகள் புகட்ட
கூடும் வெம்மைய தாய்ப்பிணக் குற்றே
தொல்லுணர்வின் மருத்துவன் தன்னைச்
சோர்வு றுத்துதல் போலொரு தந்தை
சொல்லும் வார்த்தையி லேதெரு ளாதான்
தோமிழைப் பதில் ஓர்மதி உள்ளான்
கல்லும் ஒப்பிடத் தந்தை விளக்கும்
கட்டு ரைக்கும் கடுஞ்சினம் உற்றான். (85)

தெருள் - தெளிவு, அறிவு. தோம் - குற்றம், பொல்லாங்கு, தீமை, துன்பம்

வேறு

பாம்பைக் கொடியென் றுயர்த்தவன் - அந்தப்
பாம்பெனச் சீறி மொழிகுவான் - அட!
தாம்பெற்ற மைந்தர்க்குத் தீதுசெய் - திடும்
தந்தையர் பார்மிசை உண்டுகொல்! - கெட்ட
வேம்பு நிகர் இவனுக்கு நான் - சுவை
மிக்க சருக்கரை பாண்டவர் - அவர்
தீம்பு செய்தாலும் புகழ்கிறான் - திருத்
தேடினும் என்னை இகழ்கிறான். (86)

மன்னர்க்கு நீதி ஒருவகை - பிற
மாந்தர்க்கு நீதிமற் றோர்வகை - என்று
சொன்ன வியாழ முனிவனை - இவன்
சுத்த மடையன் என்றெண்ணியே - மற்றும்
என்னென்ன வோகதை சொல்கிறான் - உற
வென்று நட்பென்று கதைக்கிறான் - அவர்
சின்னமுறச் செயவே திறம் - கெட்ட
செத்தை என்றென்னை நினைக்கிறான். (87)

இந்திர போகங்கள் என்கிறான் - உண
வின்பமும் மாதர் இன்பமும் - இவன்
மந்திரமும் படை மாட்சியும் - கொண்டு
வாழ்வதை விட்டிங்கு வீணிலே - பிறர்
செந்திருவைக் கண்டு வெம்பியே - உளந்
தேம்புதல் பேதமை என்கிறான் - மன்னர்
தந்திரம் தேர்ந்தவர் தம்மிலே - எங்கள்
தந்தையை ஒப்பவர் இல்லைகாண். (88)

மாதர்தம் இன்பம் எனக்கென்றான் - புவி
மண்டலத் தாட்சி அவர்க்கென்றான் - நல்ல
சாதமும் நெய்யும் எனக்கென்றான் - எங்கும்
சார்ந்திடும் கீர்த்தி அவர்க்கென்றான் - அட!
ஆதர விங்ஙனம் பிள்ளைமேல் - வைக்கும்
அப்பன் உலகினில் பிறிதுண்டோ! - உயிர்ச்
சோதரர் பாண்டவர், தந்தைநீ - குறை
சொல்ல இனிஇடம் ஏதையா! (89)

சொல்லின் நயங்கள் அறிந்திலேன் - உனைச்
சொல்லினில் வெல்ல விரும்பிலேன் - கருங்
கல்லிடை நாருரிப்பா ருண்டோ - நினைக்
காரணம் காட்டுதல் ஆகுமோ? - என்னைக்
கொல்லினும் வேறெது செய்யினும் - நெஞ்சில்
கொண்ட கருத்தை விடுகிலேன் - அந்தப்
புல்லிய பாண்டவர் மேம்படக் - கண்டு
போற்றி உயிர் கொண்டு வாழ்கிலேன். (90)

வாது நின்னோடு தொடுக்கிலேன் - ஒரு
வார்த்தை மட்டும் சொல்லக் கேட்பையால்
தீது நமக்கு வராமலே - வெற்றி
சேர்வதற் கோர்வழி உண்டுகாண் - களிச்
சூதுக் கவரை அழைத்(து)எல்லாம் - அதில்
தோற்றிடு மாறு புரியலாம் - இதற்
கேதும் தடைகள் சொல்லாமலே - என

தெண்ணத்தை நீகொளல் வேண்டுமால். (91)

வேறு

திரித ராட்டிரன் செவியில் - இந்தத்
தீமொழி புகுதலும் திகைத்து விட்டான்
பெரிதாத் துயர்கொணர்ந்தாய் - கொடும்
பேயெனப் பிள்ளைகள் பெற்று விட்டேன்
அரிதாக்குதல் போலே - அமர்
ஆங்கவ ரொடும்பொரல் அவலம் என்றேன்
நரிதாக்குதல் போலாம் - இந்த
நாணமில் செயலினை நாடுவனோ? (92)

ஆரியர் செய்வாரோ? - இந்த
ஆண்மை இலாச்செயல் எண்ணுவரோ?
பாரினில் பிறருடைமை - வெஃகும்
பதரினைப் போலொரு பதருண்டோ?
பேரியற் செல்வங்களும் - இசைப்
பெருமையும் எய்திட விரும்புதியேல்
காரியம் இதுவாமோ - என்றன்
காளை யன்றோஇது கருதலடா! (93)

வீரனுக் கேஇசைவார் - திரு
மேதினி எனும்இரு மனைவியர்தாம்
ஆரமர் தமரல்லார் - மிசை
ஆற்றி வெற்றியில் ஓங்குதியேல்
பாரத நாட்டினிலே - அந்தப்
பாண்டவர் எனப்புகழ் படைத்திடுவாய்.
சோரர்தம் மகனோநீ? - உயர்
சோமன்தன் ஒருகுலத் தோன்றலன்றோ? (94)

தம்மொரு கருமத்திலே - நித்தம்
தளர்வறு முயற்சி மற்றோர் பொருளை
இம்மியுங் கருதாமை - சார்ந்
திருப்பவர் தமைநன்கு காத்திடுதல்
இம்மையில் இவற்றினையே - செல்வத்(து)
இலக்கணம் என்றனர் மூதறிஞர்
அம்மஇங் கிதனையெலாம் - நீ
அறிந்திலையோ பிழை ஆற்றல் நன்றோ? (95)

நின்னுடைத் தோளனையார் - இள
நிருபரைச் சிதைத்திட நினைப்பாயோ?
என்னுடை உயிரன்றோ - என்னை

எண்ணிஇக் கொள்கையை நீக்குதியால்.
பொன்னுடை மார்பகத்தார் - இளம்
பொற்கொடி மாதரைக் களிப்பதிலும்
இன்னும் பல் இன்பத்திலும் - உளம்
இசைய விட்டேஇதை மறந்திடடா. (96)

வேறு

தந்தை இஃது மொழிந்திடல் கேட்டே
தாரிசைந்த நெடுவரைத் தோளான்
எந்தை! நின்னொடு வாதிடல் வேண்டேன்
என்று பலமுறை கூறியும் கேளாய்
வந்த காரியம் கேட்டி மற்றாங்குன்
வார்த்தை களின்றிஅப் பாண்டவர் வாரார்.
இந்த வார்த்தை உரைத்து விடாயேல்
இங்கு நின்முன் என்ஆவி இறுப்பேன். (97)

மதி தமக்கென்றிலாதவர் கோடி
வகையுறு சாத்திரக் கேள்விகள் கேட்டும்
பதியுறும் சாத்திரத் துள்ளுரை காணார்
பானைத் தேனில் அகப்பை போல்வார்.
துதிகள் சொல்லும் விதுரன் மொழியைச்
சுருதியாம் எனக் கொண்டனை நீதான்.
அதிக மோகம் அவன்உளங் கொண்டான்
ஐவர் மீதிலிங்கெம்மை வெறுப்பான். (98)

தலைவன் ஆங்கு பிறர்கையில் பொம்மை
சார்ந்து நிற்பவர் உய்ந்நெறி உண்டோ?
உலைவலால் திரிதிராட்டிர வர்க்கத்
துள்ளவர்க்கு நலமென்ப தில்லை.
நிலையிலாதன செல்வமும் மாண்பும்
நித்தம் தேடி வருந்துதல் இலாமே
விலையிலா நிதி கொண்டனம் என்றே
மெய்குழைந்து துயில்பவர் மூடர். (99)

பழைய வானிதி போதுமென் றெண்ணிப்
பாங்கு காத்திடு மன்னவர் வாழ்வை
விழையும் அன்னியர் ஓர்கணத்துற்றே
வென்றழிக்கும் விதி அறியாயோ?
குழைதல் என்பது மன்னர்க் கில்லை.
கூடக் கூடப்பின் கூட்டுதல் வேண்டும்.
பிழைஒன்றே அரசர்க்குண்டு கண்டாய்
பிறரைத் தாழ்த்துவதில் சலிப்பெய்தல். (100)

வேறு

வெல்வதெம் குலத்தொழிலாம் - எந்த
விதத்தினில் இசையினும் தவறிலைகாண்
நல்வழி தீயவழி - என
நாமதில் சோதனை செயத்தகுமோ?
செல்வழி யாவினுமே - பகை
தீர்த்திடல் சாலுமென் றனர்பெரியோர்
கொல்வது தான்படையோ - பகை
குமைப்பன யாவுநற் படையலவோ? (101)

வேறு

சுற்றத் தார்இவர் என்றனை ஐயா!
தோற்றத் தாலும் பிறவியினாலும்
பற்ற லாரென்று நண்பர்க ளென்றும்
பார்ப்ப தில்லை உலகினில் யாரும்.
மற்றெத் தாலும் பகையுற லில்லை -
வடிவினில் இல்லை அளவினில் இல்லை -
உற்றதுன் பத்தி னால்பகை உண்டாம்
ஓர்தொழில் பயில்வார் தமக்குள்ளே. (102)

பூமித் தெய்வம் விழுங்கிடும் கண்டாய்
புரவலர் பகை காய்கிலர் தம்மை.
நாமிப் பூதலத்தே குறைவெய்த
நாளும் பாண்டவர் ஏறுகினறாரால்
நேமி மன்னர் பகை சிறிதென்றே
நினைவயர்ந் திருப்பாரெனில் நோய்போல்
சாமி அந்தப் பகைமிக லுற்றே
சடிதி மாய்த்திடும் என்பதும் கண்டாய். (103)

போர்செய் வோம் எனில் நீதடுக்கின்றாய்
புவியினோரும் பழிபல சொல்வார்.
தார்செய் தோளிளம் பாண்டவர் தம்மைச்
சமரில் வெல்வதும் ஆங்கெளி தன்றாம்
யார்செய் புண்ணியத்தோ நமக் குற்றான்
எங்க ளாருயிர் போன்றஇம் மாமன்.
நேர்செய் சூதினில் வென்று தருவான்
நீதித் தருமனும் சூதில் அன்புள்ளோன். (104)

பகைவர் வாழ்வினில் இன்புறுவாயோ
பார தர்க்கு முடிமணி அன்னாய்?
புகையும் என்றன் உளத்தினை வீறில்
புன்சொல் கூறி அவித்திடலாமோ?

நகைசெய்தார் தமை நாளை நகைப்போம்.
நமர்இப் பாண்டவர் என்னில் இஃதாலே
மிகையுறும் துன்பம் ஏது? நம்மோடு
வேறுறாது எமைச் சார்ந்து நன்குய்வார். (105)

வீறு இல் - ஒளியற்ற, பெருமையற்ற

ஐய சூதிற்கவரை அழைத்தால்
ஆடி உய்குதும் அஃதியற்றாயேல்
(பொய்யென் றென்னுரை - என்னியல் போர்வாய் -
பொய்ம்மை வீறுஎன்றும் சொல்லிய துண்டோ?)
நையநின் முன்என் சிரங் கொய்தே
நானிங்(கு) ஆவி இறுத்திடுவேனால்.
செய்யலாவது செய்குதி என்றான்
திரித ராட்டிரன் நெஞ்சம் உடைந்தான். (106)

விதிசெய் விளைவினுக்கே - இங்கு
வேறுசெய்வார் புவிமீதுளரோ
மதிசெறி விதுரன்அன்றே - இது
வருந்திறன் அறிந்துமுன் எனக்குரைத்தான்
அதிசயக் கொடுங்கோலம் - விளைந்
தரசர்தம் குலத்தினை அழிக்கும் என்றான்.
சதிசெயத் தொடங்கி விட்ய் - நின்றன்
சதியினில் தானது விளையும் என்றான். (107)

விதிவிதி விதிமகனே - இனி
வேறெது சொல்லுவன் அடமகனே!
கதியுறும் காலனன்றோ - இந்தக்
கயமகன் எனநினைச் சார்ந்துவிட்டான்?
கொதியுறும் உளம்வேண்டா - நின்றன்
கொள்கையின் படிஅவர் தமையழைப்பேன்
வதியுறு மனைசெல்வாய் - என்று
வழியுங்கண் ணீரொடு விடைகொடுத்தான். (108)

வேறு

மஞ்சனு மாமனு போயினபின்னர்
மன்னன் இளைஞர் பலரை அழைத்தே
பஞ்சவர் வேள்வியிற் கண்டது போல
பாங்கின் உயர்ந்ததொர் மண்டபஞ் செய்வீர்
மிஞ்சு பொருள்அதற் காற்றுவன் என்றான்
மிக்க உவகையொ டாங்கவர் சென்றே

கஞ்ச மலரிற் கடவுள் வியப்பக்
கட்டி நிறுத்தினார் பொற்சபை ஒன்றே. (109)

வல்லவன் ஆக்கிய சித்திரம் போன்றும்
வண்மைக் கவிஞர் கனவினைப் போலும்
நல்ல தொழில்உணர்ந் தார் செயல்என்றே
நாடு முழுதும் புகழ்ச்சிகள் கூறக்
கல்லையு மண்ணையும் பொன்னையும் கொண்டு
காமர் மணிகள் சிலசில சேர்த்து
சொல்லை இசைத்துப் பிறர்செயு மாறே
சுந்தர மாம்ஒரு காப்பியம் செய்தார். (110)

காமர் - அழகு, ஒளி, அலங்காரம்

தம்பி விதுரனை மன்னன் அழைத்தான்
தக்க பரிசுகள் கொண்டினிதேகி
எம்பியின் மக்கள் இருந்தர சாளும்
இந்திர மாநகர் சார்ந்தவர் தம்பால்
கொம்பினை ஒத்த மடப்பிடி யோடும்
கூடியிங் கெய்தி விருந்து களிக்க
நம்பி அழைத்தனன் கௌரவர் கோமான்
நல்லதோர் நுந்தை எனவுரை செய்வாய். (111)

நாடு முழுதும் புகழ்ச்சிகள் கூறும்
நன்மணி மண்டபஞ் செய்ததுஞ் சொல்வாய்.
நீடு புகழ்ப்பெரு வேள்வியில் அந்நாள்
நேயமொ டேகித் திரும்பிய பின்னர்
பீடுறு மக்களை ஓர்முறை இங்கே
பேணி அழைத்து விருந்துகள் ஆற்றக்
கூடும் வயதில் கிழவன் விரும்பிக்
கூறினன் இஃதெனச் சொல்லுவை கண்டாய். (112)

பேச்சின் இடையினில் சகுனிசொற் கேட்டே
பேயெனும் பிள்ளை கருத்தினில் கொண்ட
தீச்செயல் இஃதென் றதையுங் குறிப்பால்
செப்பிடுவாய் என மன்னவன் கூற
போச்சுது போச்சுது பாரத நாடு!
போச்சுது நல்லறம் போச்சுது வேதம்
ஆச்சரியக் கொடுங் கோலங்கள் காண்போம்
ஐயஇதனைத் தடுத்தல் அரிதோ! (113)

என்று விதுரன் பெருந்துயர் கொண்டே
ஏங்கிப் பலசொல் இயம்பிய பின்னர்
சென்று வருகுதி தம்பி இனிமேல்

சிந்தனை ஏதும் இதிற் செயமாட்டேன்.
வென்று படுத்தனன் வெவ்விதி என்னை
மேலை விளைவுகள் நீயறியாயோ?
அன்று விதித்ததை இன்று தடுத்தல்
யார்க்கெளி தென்று மெய்சோர்ந்து விழுந்தான். (114)

வேறு

அண்ணனிடம் விடைபெற்று விதுரன் சென்றான்.
அடவிமலை ஆறெல்லாம் கடந்து போகித்
திண்ணமுறு தடந்தோளும் உளமுங் கொண்டு
திருமலியப் பாண்டவர்தாம் அரசு செய்யும்
வண்ணமுயர் மணிநகரின் மருங்கு செல்வான்
வழியிடையே நாட்டினுறு வளங்கள் நோக்கி
எண்ணமுற லாகித்தன் இதயத் துள்ளே
இனையபல மொழிகூறி இரங்கு வானால். (115)

நீலமுடி தரித்தபல மலைசேர் நாடு
நீரமுதம் எனப்பாய்ந்து நிரம்பு நாடு
கோலமுறு பயன்மரங்கள் செறிந்து வாழும்
குளிர்காவும் சோலைகளும் குலவு நாடு
ஞாலமெலாம் பசியின்றிக் காத்தல் வல்ல
நன்செய்யும் புன்செய்யும் நலமிக் கோங்க
பாலடையு நறுநெய்யும் தேனும் உண்டு
பண்ணவர்போல் மக்களெலாம் பயிலும் நாடு. (116)

அன்னங்கள் பொற்கமலத் தடத்தின் ஊர
அளிமுரலக் கிளிமழலை அரற்றக் கேட்போர்
கன்னங்கள் அமுதூறக் குயில்கள் பாடும்
காவினத்து நறுமலரின் கமழைத் தென்றல்
பொன்அங்க மணிமடவார் மாட மீது
புலவிசெயும் போழ்தினிலே போந்து வீச
வன்னங்கொள் வரைத்தோளார் மகிழ மாதர்
மையல்விழி தோற்றுவிக்கும் வண்மை நாடு. (117)

அளி - கருந்தேனீ. முரலுதல் - ஒலித்தல். கமழை - வாசனையை

பேரறமும் பெருந்தொழிலும் பிறங்கு நாடு
பெண்களெலாம் அரம்பையர்போல் ஒளிரு நாடு
வீரமொடு மெய்ஞ்ஞானம் தவங்கள் கல்வி
வேள்வியெனும் இவையெல்லாம் விளங்கு நாடு
சோரமுதல் புன்மைஎதும் தோன்றா நாடு
தொல்லுலகின் முடிமணிபோல் தோன்று நாடு
பாரதர்தந் நாட்டினிலே நாசம் எய்தப்

பாவியேன் துணைபுரியும் பான்மை என்னே! (118)

வேறு

விதுரன் வருஞ்செய்தி தாம்செவி யுற்றே
வீறுடை ஐவரும் உளமகிழ் பூத்துச்
சதுரங்க சேனையுடன்பல பரிசும்
தாளமு மேளமுந் தாங்கொண்டு சென்றே
எதிர்கொண் டழைத்து மணிமுடி தாழ்த்தி
ஏந்தல் விதுரன் பதமலர் போற்றி
மதுர மொழியில் குசலங்கள் பேசி
மன்ன னொடுந்திரு மாளிகை சேர்ந்தார். (119)

குந்தி யெனும்பெயர்த் தெய்வதம் தன்னைக்
கோமகன் கண்டுவ ணங்கிய பின்னர்
வெந்திறல் கொண்ட துருபதன் செல்வம்
வெள்கித் தலைகுனிந் தாங்குவந் தெய்தி
அந்தி மயங்க விசும்பிடைத் தோன்றும்
ஆசைக் கதிர்மதி யன்ன முகத்தை
மந்திரந் தேர்ந்ததொர் மாமன் அடிக்கண்
வைத்து வணங்கி வனப்புற நின்றாள். (120)

வெள்கி - வெட்கி

தங்கப் பதுமை எனவந்து நின்ற
தையலுக்(கு) ஐயன்நல் லாசிகள் கூறி
அங்கங் குளிர்ந்திட வாழ்த்திய பின்னர்
ஆங்கு வந்துற்ற உறவினர் நண்பர்
சிங்க மெனத்திகழ் வீரர் புலவர்
சேவகர் யாரொடும் செய்திகள் பேசிப்
பொங்கு திருவின் நகர்வலம் வந்து
போழ்து கழிந்துஇர வாகிய பின்னர் (121)

ஐவர் தமையும் தனிக்கொண்டு போகி
ஆங்கொரு செம்பொன் அரங்கிலிருந்தே
மைவரைத் தோளன் பெரும்புக ழாளன்
மாமகள் பூமகட் கோர்மண வாளன்
மெய்வரு கேள்வி மிகுந்த புலவன்
வேந்தர் பிரான்திரி தராட்டிரக் கோமான்
தெய்வ நலங்கள் சிறந்திட நும்மைச்
சீரொடு நித்தலும் வாழ்கென வாழ்த்தி (122)

உங்களுக் கென்னிடம் சொல்லி விடுத்தான்
ஓர்செய்தி மற்றஃ துரைத்திடக் கேளீர்

மங்களம் வாய்ந்தந லத்திபுரத்தே
வையக மீதில் இணையற்ற தாகத்
தங்கும் எழில்பெரு மண்டபம் ஒன்று
தம்பியர் சூழ்ந்து சமைத்தனர் கண்டீர்
அங்கதன் விந்தை அழகினைக் காண
அன்பொடு நும்மை அழைத்தனன் வேந்தன். (123)

வேள்விக்கு நாங்கள் அனைவரும் வந்து
மீண்டு பலதினம் ஆயின வேனும்
வாள்வைக்கு நல்விழி மங்கையொடே நீர்
வந்தெங்க ளூரில் மறுவிருந்தாட
நாள்வைக்கும் சோதிடரால் இதுமட்டும்*
நாயகன் உம்மை அழைத்திட வில்லை.
கேள்விக் கொரு மிதிலாதிபன் ஒத்தோன்
கேடற்ற மாதம் இதுவெனக் கண்டே (124)

*இதுவரை.

வந்து விருந்து களித்திட நும்மை
வாழ்த்தி அழைத்தனன் என்னரு மக்காள்!
சந்து கண்டேஅச் சகுனிசொல் கேட்டுத்
தன்மை இழந்த சுயோதன மூடன்
விந்தை பொருந்திய மண்டபத் தும்மை
வெய்யபுன் சூது களித்திடச் செய்யும்
மந்திரம் ஒன்று மனத்திடைக் கொண்டான்
வன்மம் இதுவும் நுமக்(கு) அறிவித்தேன். (125)

என்று விதுரன் இயம்பத் தருமன்
எண்ணங் கலங்கிச் சிலசொல் உரைப்பான்
மன்று புனைந்தது கேட்டும்இச் சூதின்
வார்த்தையைக் கேட்டுமிங் கென்றன் மனத்தே
சென்று வருத்தம் விளைகின்ற தையா
சிந்தையில் ஐயம் விளைகின்ற தையா
நன்று நமக்கு நினைப்பவன் அல்லன்
நம்பல் அரிது சுயோதனன் தன்னை. (126)

கொல்லக் கருதி சுயோதனன் முன்பு
குத்திரமான சதிபல செய்தான்
சொல்லப் படாதுஅவனால் எமக்கான
துன்பம் அனைத்தையும் நீஅறியாயோ?
வெல்லக் கடவர் எவர்என்ற போதும்
வேந்தர்கள் சூதை விரும்பிட லாமோ?
தொல்லைப் படும்என் மனம்தெளி வெய்தச்
சொல்லுதி நீயொரு சூழ்ச்சியிங் கென்றான். (127)

குத்திரம் - குரூரம், வஞ்சகம்.
“கொடிப் பவளக் கிள்ளாய் குத்திரமும் சூதும்
மடிப்பவளின் வெல்கொடிதான் மற்றென்.....” பாரததேவியின் திருத்தசாங்கம்.

வேறு

விதுரனும் சொல்லுகிறான் - இதை
விடம்எனச் சான்றவர் வெகுளுவர் காண்
சதுரெனக் கொள்ளுவாரோ - இதன்
தாழ்மை யெலாம் அவர்க்குரைத்து விட்டேன்
இதுமிகத் தீதென்றே - அண்ணன்
எத்தனை சொல்லியும் இளவரசன்
மதுமிகுத் துண்டவன்போல் - ஒரு
வார்த்தையை யேபற்றிப் பிதற்றுகிறான். (128)

கல்எனில் இணங்கிவிடும் - அண்ணன்
காட்டிய நீதிகள் கணக்கிலவாம்.
புல்லன்இங் கவற்றையெலாம் - உளம்
புகுதவொட்டாது தன் மடமையினால்
சல்லிஅச் சூதினிலே - மனம்
தளர்வற நின்றிடும் தகைமை சொன்னேன்.
சொல்லிய குறிப்பறிந்தே - நலந்
தோன்றிய வழியினைத் தொடர்க என்றான். (129)

சல்லி - சிறிய ஓடு (சல்லி என்பதைச் சிறுமை அல்லது சிறிய என்ற பொருளில் பயன்படுத்துகிறார் பாரதியார், “சல்லித் துளிப்பறவைச் சாதியிலே நான்பிறந்தேன்” குயில் பாட்டு)

தருமனும் இவ்வளவில் - உளத்
தளர்ச்சியை நீக்கியொர் உறுதிகொண்டே
பருமங்கொள் குரலினனாய் - மொழி
பதைத்திடல் இன்றியிங் கிவையுரைப்பான்
மருமங்கள் எவைசெயினும் - மதி
மருண்(டு)அவர் விருந்தறம் சிதைத்திடினும்
கருமம் ஒன்றே உளதாம் - நங்கள்
கடன்அதை நெறிப்படி புரிந்திடுவோம். (130)

பருமம் - உறுதி

தந்தையும் வரப்பணித்தான் - சிறு
தந்தையும் தூதுவந்து அதைஉரைத்தான்
சிந்தை ஒன்றினி யில்லை - எது
சேரினு நலமெனத் தெளிந்து விட்டேன்.

முந்தையச் சிலைராமன் - செய்த
முடிவினை நம்மவர் மறப்பதுவோ?
நொந்தது செயமாட்டோம் - பழ
நூலினுக் கிணங்கிய நெறிசெலுவோம். (131)

ஐம்பெரும் குரவோர்தாம் - தரும்
ஆணையைக் கடப்பதும் அறநெறியோ?
வெம்பரு மதயானை - பரி
வியன்தேர் ஆளுடன் இருதினத்தில்
பைம்பொழில் அத்தி நகர் - செலும்
பயணத்திற் குரியன புரிந்திடுவாய்
மொய்ம்புடை விறல்வீமா - என
மொழிந்தனன் அறநெறி முழுதுணர்ந்தான். (132)

ஐம்பெரும் குரவோர் - அமைச்சர், புரோகிதர், படைத்தலைவர், தூதர், சாரணர். மொய்ம்பு - தோள்வலி, பலம். ("முப்பதுகோடி முகமுடையாள் - உயிர் - மொய்ம்புற ஒன்றுடையாள்")

வீமனும் திகைத்து விட்டான் - இள
விசயனை நோக்கியிங் கிதுசொல்லுவான்.
மாமனு மருகனுமா - நமை
மழித்திடக் கருதியிவ் வழிதொடர்ந்தார்.
தாமதம் செய்வோமோ? - செலத்
தகும்தகும் எனஇடி யுறநகைத்தான்.
கோமகன் உரைப்படியே - படை
கொண்டுசெல் வோம்ஒரு தடையிலைகாண். (133)

நெடுநாட் பகைகண்டாய் - இந்த
நினைப்பினில் யான் கழித்தன பலநாள்.
கெடுநாள் வருமளவும் - ஒரு
கிருமியை அழிப்பவர் உலகிலுண்டோ?
படுநாட் குறியன்றோ - இந்தப்
பாதக நினைப்பவர் நினைத்ததுதான்.
விடுநாண் கோத்திடடா - தம்பி
வில்லினுக் கிரைமிக விளையுதடா. (134)

போரிடச் செல்வமடா - மகன்
புலைமையும் தந்தையின் புலமைகளும்
யாரிடம் அவிழ்க்கின்றார் - இதை
எத்தனை நாள்வரை பொறுத்திருப்போம்?
பாரிடத் திவரொடுநாம் - எனப்
பகுதியிவ் விரண்டிற்தும் காலமொன்றில்
நேரிட வாழ்வுண்டோ - இரு
நெருப்பினுக் கிடையினில் ஒருவிறகோ? (135)

வேறு

வீமன் உரைத்தது போலவே - உளம்
வெம்பி நெடுவில் விசையனும் - அங்கு
காமனும் சாமனும் ஒப்பவே - நின்ற
காளை இளைஞர் இருவரும் - செய்ய
தாமரைக் கண்ணன் யுதிட்டிரன் - சொல்லைத்
தட்டிப் பணிவொடு பேசினார் - தவ
நேமந் தவறலும் உண்டுகாண் - நரர்
நெஞ்சம் கொதித்திடு போதிலே. (136)

அன்பும் பணிவும் உருக்கொண்டார் - அணு
வாயினும் தன்சொல் வழாதவர் - அங்கு
வன்பு மொழி சொலக் கேட்டனன் - அற
மன்னவன் புன்னகை பூத்தனன் - அட
முன்பு சுயோதனன் செய்ததும் - இன்று
மூண்டிருக்கும் கொடுங்கோலமும் - இதன்
பின்பு விளைவதும் தேர்ந்துள்ளேன் - எனைப்
பித்தன்என் றெண்ணி யுரைத்திட்டீர். (137)

கைப்பிடி கொண்டு சுழற்றுவோன் - தன்
கணக்கில் சுழன்றிடும் சக்கரம் . அது
தப்பி மிகையும் குறையுமாச் - சுற்றும்
தன்மை அதற்குள தாகுமோ? . இதை
ஒப்பிட லாகும் புவியின்மேல் - என்றும்
உள்ள உயிர்களின் வாழ்விற்கே - ஒரு
செப்பிடு வித்தையைப் போலவே - புவிச்
செய்திகள் தோன்றிடு மாயினும் (138)

இங்கிவை யாவும் தவறிலா - விதி
ஏற்று நடக்கும் செயல்களாம் - முடி
வெங்கணு மின்றி எவற்றினும் - என்றும்
ஏறி இடையின்றிச் செல்வதாம் - ஒரு
சங்கிலி ஒக்கும் விதிகண்டீர் - வெறும்
சாத்திரம் அன்றிது சத்தியம் - நின்று
மங்கியோர் நாளில் அழிவதா - நங்கள்
வாழ்க்கை இதனைக் கடந்ததோ? (139)

தோன்றி அழிவது வாழ்க்கைதான் - இங்குத்
துன்பத்தொ டின்பம் வெறுமையாம் - இவை
மூன்றில் எதுவரு மாயினும் - களி
மூழ்கி நடத்தல் முறைகண்டீர் . நெஞ்சில்
ஊன்றிய கொள்கை பிழைப்பரோ - துன்பம்

உற்றிடும் என்பதோர் அச்சத்தால் - விதி
போன்று நடக்கும் உலகென்றே - கடன்
போற்றி ஒழுகுவர் சான்றவர். (140)

(உயிர் பெற்ற தமிழர் பாட்டில் {இனியொரு தொல்லையும் இல்லை என்று தொடங்கும் பாடல்}, முதல் மூன்றடிகள் திரும்பவும் பயிலுகின்றன.)

சேற்றில் உழலும் புழுவிற்கும் - புவிச்
செல்வம் உடைய அரசர்க்கும் - பிச்சை
ஏற்றுடல் காத்திடும் ஏழைக்கும் - உயிர்
எத்தனை உண்டவை யாவிற்கும் - நித்தம்
ஆற்றுதற் குள்ள கடமைதான் - முன்வந்(து)
அவ்வக் கணந்தோறும் நிற்குமாம் - அது
தோற்றும் போதிற் புரிகுவார் - பல
சூழ்ந்து கடமை அழிப்பரோ? (141)

யாவர்க்கும் பொது வாயினும் - சிறப்(பு)
என்பர் அரசர் குலத்திற்கே - உயர்
தேவரை ஒப்ப முன்னோர்தமைத் - தங்கள்
சிந்தையில் கொண்டு பணிகுதல் - தந்தை
ஏவலை மைந்தர் புரிதற்கே - வில்
இராமன் கதையையும் காட்டினேன் - புவிக்
காவலர் தம்மில் சிறந்தநீர் - இன்று
கர்மம் பிழைத்திடு வீர்கொலோ? (142)

வேறு

என்றினைய நீதிபல தரும ராசன்
எடுத்துரைப்ப இளைஞர்களும் தம்கை கூப்பி
குன்றினிலே ஏற்றிவைத்த விளக்கைப் போல
குவலயத்திற் கறங்காட்டத் தோன்றி னாய்நீ.
வென்றிபெறும் திருவடியாய் நினது சொல்லை
மீறிஒரு செயலுண்டோ? ஆண்டான் ஆணை
அன்றிஅடி யார்தமக்குக் கடன்வே றுண்டோ?
ஐயனேபாண் டவர்தம் ஆவி நீயே. (143)

துன்பமுறும் எமக்கென்றே எண்ணி நின்வாய்ச்
சொல்லைமறுத் துரைத்தோமா நின்பா லுள்ள
அன்புமிகை யாலன்றோ திருவுளத்தின்
ஆக்கினையைக் எதிர்த்துரைத்தோம் அறிவில் லாமல்!
மன்பதையின் உளச்செயல்கள் தெளியக் காணும்
மன்னவனே மற்றிதுநீ அறியா தொன்றோ?
வன்புமொழி பொறுத்தருள்வாய் வாழி நின்சொல்
வழிச்செல்வோம் எனக்கூறி வணங்கிச் சென்றார். (144)

ஆங்கதன்பின் மூன்றாநாள் இளைஞ ரோடும்
அணியிழையப் பாஞ்சாலர் விளக்கி னோடும்
பாங்கினுறு பரிசனங்கள் பலவி னோடும்
படையினொடும் இசையினொடும் பயண மாகித்
தீங்கதனைக் கருதாத தருமக் கோமான்
திருநகர்விட் டகல்கின்றான் தீயோ ரூர்க்கே!
நீங்கிஅகன் றிடலாகும் தன்மை உண்டோ
நெடுங்கரத்து விதிகாட்டு நெறியி னின்றே! (145)

நரிவகுத்த வலையினிலே தெரிந்து சிங்கம்
நழுவிவிழும் சிற்றெறும்பால் யானை சாகும்.
வரிவகுத்த உடற்புலியைப் புழுவும் கொல்லும்
வருங்காலம் உணர்வோரும் மயங்கி நிற்பார்.
கிரிவகுத்த ஓடையிலே மிதந்து செல்லும்
கீழ்மேலாம் மேல்கீழாம் கிழக்கு மேற்காம்.
புரிவகுத்த முந்நூலார் புலையர் தம்மை
போற்றி நிற்பார் விதிவகுத்த போழ்தின் அன்றே. (146)

மாலைப் போதாதலுமே மன்னன் சேனை
வழியிடையோர் பூம்பொழிலின் அமர்ந்த காலை
சேலைப்போல் விழியாளை பார்த்தன் கொண்டு
சென்றாங்கோர் தனியிடத்தே பசும்புல் மேட்டில்
மேலைப்போம் பரிதியினைத் தொழுது கண்டான்.
மெல்லியலும் அவன்தொடைமேல் மெல்லச் சாய்ந்து
பாலைப்போல் மொழிபிதற்ற அவளை நோக்கி
பார்த்தனுமப் பரிதியெழில் விளக்கு கின்றான். (147)

பாரடியோ வானத்தில் புதுமை எல்லாம்
பண்மொழீ! கணந்தோறும் மாறி மாறி
ஓரடிமற் றோரடியோ டொத்தல் இன்றி
உவகையுற நவநவமாத் தோன்றும் காட்சி.
யாரடியிங் கிவைபோலப் புவியின் மீதே
எண்ணரிய பொருள்கொடுத்தும் இயற்ற வல்லார்?
சீரடியால் பழவேத முனிவர் போற்றும்
செழுஞ்சோதி வனப்பையெல்லாம் சேரக் காண்பாய். (148)

கணந்தோறும் வியப்புக்கள் புதிய தோன்றும்!
கணந்தோறும் வெவ்வேறு கனவு தோன்றும்!
கணந்தோறும் நவநவமாம் களிப்புத் தோன்றும்!
கருதிடவும் சொல்லிடவும் எளிதோ ஆங்கே
கணந்தோறும் ஒருபுதிய வண்ணம் காட்டிக்
காளிபரா சக்தியவள் களிக்கும் கோலம்
கணந்தோறும் அவள்பிறப்பாள் என்று மேலோர்

கருதுவதன் விளக்கத்தை இங்குக் காண்பாய். (149)

அடிவானத் தேயங்கு பரிதிக் கோளம்
அளப்பரிய விரைவினொடு சுழலக் காண்பாய்
இடிவானத் தொளிமின்னல் பத்துக் கோடி
எடுத்தவற்றை ஒன்றுபட உருக்கி வார்த்து
முடிவான வட்டத்தைக் காளி யாங்கே
மொய்குழலாய் சுழற்றுவதன் மொய்ம்பு காணாய்.
வடிவான தொன்றாகத் தகடி ரண்டு
வட்டமுறச் சுழலுவதை வளைந்து காண்பாய். (150)

அமைதியொடு பார்த்திடுவாய் மின்னே! பின்னே
அசைவுறுமோர் மின்செய்த வட்டு; முன்னே
சமையுமொரு பச்சைநிற வட்டங் காண்பாய்.
தரணியில்ங் கிதுபோலோர் பச்சை உண்டோ?
இமைகுவிய மின்வட்டின் வயிரக் கால்கள்
எண்ணில்லா திடையிடையே எழுதல் காண்பாய்.
உமைகவிதை செய்கின்றான் எழுந்து நின்றே
உரைத்திடுவோம் பல்லாண்டு வாழ்க என்றே! (151)

பார்சுடர்ப் பரிதியைச் சூழவே படர்முகில்
எத்தனை தீப்பட் டெரிவன! ஓகோ!
என்னடீ இந்த வன்னத் தியல்புகள்!
எத்தனை வடிவம்! எத்தனை கலவை!
தீயின் குழம்புகள்! செழும்பொன் காய்ச்சி
விட்ட ஓடைகள்! வெம்மை தோன்றாமே
எரிந்திடுந் தங்கத் தீவுகள்! பாரடீ
நீலப் பொய்கைகள்! அடடா நீல

வன்னம் ஒன்றில் எத்தனை வகையடீ!
எத்தனை செம்மை! பசுமையும் கருமையும்
எத்தனை! கரிய பெரும்பெரும் பூதம்!
நீலப் பொய்கையின் மிதந்திடுந் தங்கத்
தோணிகள், சுடரொளிப் பொற்கரை யிட்ட
கருஞ்சிக ரங்கள்! காணடி யாங்கு
தங்கத் திமிங்கிலந் தாம்பல மிதக்கும்
இருட்கடல்! ஆஹா! எங்குநோக் கிடினும்
ஒளித்திரள்! ஒளித்திரள்! வன்னக் களஞ்சியம்! (152)

செங்கதிர்த் தேவன் சிறந்த ஒளியினைத் தேர்கின்றோம் - அவன்
எங்கள் அறிவினைத் தூண்டி நடத்துக என்பதோர் - நல்ல
மங்களம் வாய்ந்த சுருதி மொழி கொண்டு வாழ்த்தியே - இவர்
தங்களினங்கள் இருந்த பொழிலினைச் சார்ந்தனர் - பின்னர்
அங்கவ் விரவு கழிந்திட வைகறை ஆதலும் - மன்னர்

பொங்கு கடலொத்த சேனைகளோடு புறப்பட்டே - வழி
எங்குந் திகழும் இயற்கையின் காட்சியில் இன்புற்றே - கதிர்
மங்கிடு முன்னொளி மங்கு நகரிடை வந்துற்றார். (153)

முதலாவது துரியோதனன் சூழ்ச்சிச் சருக்கம் முற்றிற்று.

இரண்டாவது சூதாட்டச் சருக்கம்

தெளிவுறவே யறிந்திடுதல் தெளிவுதர
மொழிந்திடுதல் சிந்திப் பார்க்கே
களிவளர உள்ளத்தில் ஆநந்தக்
கனவுபல காட்டல் கண்ணீர்த்
துளிவரஉள் உருக்குதலிங் கிவையெல்லாம்
நீயருளும் தொழில்க ளன்றோ?
ஒளிவளருந் தமிழ்வாணி யடியனேற்
கிவையனைத்தும் உதவு வாயே. (154)

நூல்

அத்தின மாநக ரத்தினில் வந்தனர்
ஆரியப் பாண்டவர் என்றது கேட்டலும்
தத்தி எழுந்தன எண்ணறும் கூட்டங்கள்
சந்திகள், வீதிகள், சாலைகள், சோலைகள்
எத்திசை நோக்கினு மாந்தர் நிறைந்தனர்.
இத்தனை மக்களும் எங்கண் இருந்தனர்
இத்தின மட்டும் எனவியப் பெய்துற
எள்ளும் விழற்கிட மின்றி இருந்தார். (155)

மந்திர கீத முழக்கினர் பார்ப்பனர்
வன்றடந் தோள்கொட்டி ஆர்த்தனர் மன்னவர்
வெந்திறல் யானையும் தேரும் குதிரையும்
வீதிகள் தோறும் ஒலிமிகச் செய்தன;
வந்தியர் பாடினர்; வேசையர் ஆடினர்;
வாத்தியங் கோடி வகையின் ஒலித்தன.
செந்திரு வாழு நகரினில் அத்தினம்
சேர்ந்த ஒலியைச் சிறிதென லாமோ? (156)

வந்தியர் - மங்கலப் பாடகர்; அரசர் புகழ் பாடும் சூதர்.

வாலிகன் தந்ததோர் தேர்மிசை ஏறியம்
மன்னன் யுதிட்டிரன் தம்பியர் மாதர்கள்
நாலிய லாம்படை யோடு நகரிடை

நல்ல பவனி எழுந்த பொழுதினில்
சேலியம் கண்ணியர் பொன்விளக் கேந்திடச்
சீரிய பார்ப்பனர் கும்பங்கள் ஏந்திடக்
கோலிய பூமழை பெய்திடத் தோரணங்
கொஞ்ச நகரெழில் கூடிய தன்றே. (157)

தருமர் ஒரு யானையின் மீதேறிச் சென்றதாக வியாசர் குறிப்பிடுகிறார். பாரதி இங்கு மாறுபடக் காரணம் உண்டு. பந்தயம் வைத்து ஆடுகையில் நான் ஏறி வந்த தேரைப் பணயமாக வைக்கிறேன் என்று வியாச பாரதத்தில் தருமன் சொல்கிறான். பாடல் 189ல் பாரதியும் அவ்விதமே கூறுகிறான். எனவே தேரேறிச் சென்றதாகச் சொல்வதே பொருத்தம். மூல நூலை எவ்வளவு நுட்பமாகப் படித்திருக்கிறான் என்பதற்கு இது ஆதாரம்.

வேறு

மன்னவன் கோயிலிலே - இவர்
வந்து புகுந்தனர் வரிசையொடே
பொன்னரங் கினில்இருந்தான் - கண்ணில்
புலவனைப் போய்நின்று போற்றியபின்
அன்னவன் ஆசிகொண்டே - உயர்
ஆரிய வீட்டுமன் அடிவணங்கி
வில்நயம் உணர் கிருபன் - புகழ்
வீரத் துரோணன்அங் கவன்புதல்வன் (158)

மற்றுள பெரியோர்கள் - தமை
வாழ்த்திஉள் அன்பொடு வணங்கிநின்றார்.
கொற்றமிக் குயர்கன்னன் - பணிக்
கொடியோன் இளையவர் சகுனியொடும்
பொற்றடந்தோள் சருவப் - பெரும்
புகழினர் தழுவினர் மகிழ்ச்சி கொண்டார்
நற்றவக் காந்தாரி - முதல்
நாரியர் தமைமுறைப் படிதொழுதார். (159)

சருவல் - நேசப் பான்மை (தோன்ற)

குந்தியும் இளங்கொடியும் - வந்து
கூடிய மாதர்தம் மொடுகுலவி
முந்திய கதைகள் சொல்லி - அன்பு
மூண்டுரை யாடிப்பின் பிரிந்துவிட்டார்
அந்தியும் புகுந்ததுவால் - பின்னர்
ஐவரும் உடல்வலித் தொழில்முடித்தே
சந்தியும் சபங்களும்செய் - தங்கு
சாரும்இன் உணவமு துண்டதன்பின் (160)

சந்தன மலர்புனைந்தே - இளந்
தையலர் வீணைகொண்டு யிர்உருக்கி
விந்தைகொள் பாட்டிசைப்ப - அதை
விழைவொடு கேட்டனர் துயில்புரிந்தார்.
வந்ததொர் துன்பத்தினை - அங்கு
மடித்திடல் அன்றிப்பின் வருந்துயர்க்கே
சிந்தனை யுழல்வாரோ - உளச்
சிதைவின்மை ஆரியர் சிறப்பன்றோ? (161)

பாணர்கள் துதிகூற - இளம்
பகலவன் எழுமுனர்த் துயிலெழுந்தார்
தோணலத் திணையில்லார் - தெய்வந்
துதித்தனர் செய்யபொற் பட்டணிந்து
பூணணிந் தாயுதங்கள் - பல
பூண்டுபொற் சபையிடைப் போந்தனரால்.
நாணமில் கவுரவரும் - தங்கள்
நாயக னொடுமங்கு வீற்றிருந்தார். (162)

தோணலத்து - தோள் நலத்து

வீட்டுமன் தானிருந்தான் - அற
விதுரனும் பார்ப்பனக் குரவர்களும்
நாட்டுமந் திரிமாரும் - பிற
நாட்டினர் பலபல மன்னர்களும்
கேட்டினுக் கிரையாவான் - மதி
கெடுந்துரி யோதனன் கிளையினரும்
மாட்டுறு நண்பர்களும் - அந்த
வான்பெருஞ் சபையிடை வயங்கிநின்றார். (163)

மாட்டுறு - (மாடு உறு) பக்கத்தில் இருக்கும். வயங்குதல் - விளங்குதல், மிகுதல்.

புன்தொழில் கவறதனில் - இந்தப்
புவிமிசை இணையிலை எனும்புகழான்
நன்றறியாச் சகுனி - சபை
நடுவினில் ஏறெனக் களித்திருந்தான்.
வென்றிகொள் பெருஞ்சூதர் - அந்த
விவிஞ்சதி சித்திர சேனனுடன்
குன்றுசத்திய விரதன் - இகழ்*
கூர் புருமித்திரன் சயன்என்பார் (164)

*இகழ் என்று பாடபேதம் பல பதிப்புகளில் காணப்படுகிறது. இகழ் என்பதே பொருத்தமாக இருக்கிறது.

சாலவும் அஞ்சுதரும் - கெட்ட

சதிக்குணத் தார்பல மாயம் வல்லோர்
கோலநற் சபைதனிலே - வந்து
கொக்கரித் தார்ப்பரித்(து) அமர்ந்திருந்தார்.
மேலவர் தமைவணங்கி - அந்த
வெந்திறல் பாண்டவர் இளைஞர்தமை
ஆலமுற்றிடத் தழுவி - செம்பொன்
ஆதனத்(து) அமர்ந்தஅப் பொழுதினிலே (165)

சொல்லுகின்றான் சகுனி - அறத்
தோன்றல்உன் வரவினைக் காத்துளர்காண்
மல்லுறு தடந்தோளார் - இந்த
மன்னவர் அனைவரு நெடும்பொழுதா
வில்லுறு போர்த்தொழிலாற் - புவி
வென்று நம் குலத்தினை மேம்படுத்தீர்.
வல்லுறு சூதெனும் போர் - தனில்
வலிமைகள் பார்க்குதும் வருதியென்றான். (166)

தருமனங் கிவைசொல்வான் - ஐய
சதியுறு சூதினுக் கெனையழைத்தாய்
பெருமையிங் கிதிலுண்டோ? - அறப்
பெற்றியுண்டோ? மறப்பீடுளதோ?
வருமநின் மனத்துடையாய்; - எங்கள்
வாழ்வினை உகந்திலை எனலறிவேன்.
இருமையும் கெடுப்பதுவாம் - இந்த
இழிதொழிலால் எமை அழிப்பதுற்றாய். (167)

கலகல வெனச் சிரித்தான் - பழிக்
கவற்றையோர் சாத்திரம் எனப்பயின்றோன்.
பலபல மொழிகுவதேன் - உனைப்
பார்த்திவன் என்றெண்ணி அழைத்துவிட்டேன்.
நிலமுழு தாட்கொண்டாய் - தனி
நீஎனப் பலர்சொலக் கேட்டதனால்
சிலபொருள் விளையாட்டில் - செலும்
செலவினுக் கழிகலை எனநினைத்தேன். (168)

பாரத மண்டலத்தார் - தங்கள்
பதிஒரு பிசுனன்என் றறிவேனோ?
சோரமிங் கிதிலுண்டோ? - தொழில்
சூதெனினும் ஆடுநர் அரசரன்றோ?
மாரத வீரர் முன்னே - நடு
மண்டபத்தே பட்டப் பகலினிலே
சூர சிகாமணியே! - நின்றன்
சொத்தினைத் திருடுவம் எனும்கருத்தோ? (169)

அச்சம் இங்கிதில் வேண்டா - விரைந்
தாடுவ நெடும்பொழு தாயினதால்.
கச்சையொர் நாழிகையா - நல்ல
காயுடன் விரித்திங்கு கிடந்திடல் காண்.
நிச்சய நீ வெல்வாய் - வெற்றி
நினக்கியல் பாயின தறியாயோ?
நிச்சய நீ வெல்வாய் - பல
நினைகுவ தேன்களி தொடங்குகென்றான். (170)

தோல் விலைக்குப் பசுவினைக் கொல்லும்
துட்டன் இவ்வுரை கூறுதல் கேட்டே
நூல்விலக்கிய செய்கைகள் அஞ்சும்
நோன்பினோன் உள நொந்திவை கூறும்:-
தேவலப் பெயர் மாமுனிவோனும்
செய்ய கேள்வி அசிதனு முன்னர்க்
காவலர்க்கு விதித்த தந்நூலில்
கவற்றை நஞ்செனக் கூறினர் கண்டாய். (171)

வஞ்சகத்னில் வெற்றியை வேண்டார்
மாயச் சூதைப் பழியெனக் கொள்வார்
அஞ்சலின்றி சமர்க் களத்தேறி
யாக்கும் வெற்றி அதனை மதிப்பார்
துஞ்ச நேரினும் தூயசொல் லன்றிச்
சொல் மிலேச்சரைப் போலென்றுஞ் சொல்லார்
மிஞ்சு சீர்த்திகொள் பாரத நாட்டில்
மேவும் ஆரியர் என்றனர் மேலோர். (172)

ஆத லாலிந்தச் சூதினை வேண்டேன்!
ஐய செல்வம் பெருமை இவற்றின்
காத லால் அரசாற்றுவன் அல்லேன்,
காழ்த்து நல்லறம் ஓங்கவும் ஆங்கே
ஓதலானும் உணர்த்துத லானும்
உண்மை சான்ற கலைத்தொகை யாவும்
சாதல் இன்றி வளர்த்திடு மாறும்
சகுனி யான்அர சாளுதல் கண்டாய். (173)

காழ்த்தல் - அளவு கடந்து மிகுதல்

என்னை வஞ்சித்தென் செல்வத்தைக் கொள்வோர்
என்றனக் கிடர் செய்பவர் அல்லர்.
முன்னை நின்றதொர் நான்மறை கொல்வார்
மூதுணர்விற் கலைத்தொகை மாய்ப்பார்
பின்னை என்னுயிர்ப் பாரத நாட்டில்
பீடை செய்யுங் கலியை அழைப்பார்.

நின்னை மிக்க பணிவொடு கேட்பேன்
நெஞ்சிற் கொள்கையை நீக்குதி என்றான், (174)

சாத்திரம் பேசுகின்றாய் - எனத்
தழல்படு விழியொடு சகுனி சொல்வான்
கோத்திரக் குலமன்னர் - பிறர்
குறைபடத் தம்புகழ் கூறுவரோ?
நாத்திறன் மிகவுடையாய் - எனில்
நம்மவர் காத்திடும் பழவழக்கை
மாத்திர மறந்துவிட்டாய் - மன்னர்
வல்லினுக் கழைத்திடில் மறுப்ப துண்டோ? (175)

தேர்ந்தவன் வென்றிடுவான் - தொழில்
தேர்ச்சியில் லாதவன் தோற்றிடுவான்.
நேர்ந்திடும் வாட்போரில் - குத்து
நெறியறிந் தவன்வெலப் பிறனழிவான்
ஓர்ந்திடு சாத்திரப்போர் - தனில்
உணர்ந்தவன் வென்றிட உணராதான்
சோர்ந்தழி வெய்திடுவான் - இவை
சூதென்றும் சதியென்றும் சொல்வாரோ? (176)

வல்லவன் வென்றிடுவான் - தொழில்
வன்மை யிலாதவன் தோற்றிடுவான்
நல்லவன் அல்லாதான் - என
நாணமி லார்சொலுங் கதைவேண்டா
வல்லமர் செய்திடவே - இந்த
மன்னர்முன்னே நினை அழைத்துவிட்டேன்
சொல்லுக வருவதுண்டேல் - மனத்
துணிவிலையேல் அதுஞ் சொல்லுகென்றான். (177)

வெய்ய தான விதியை நினைந்தான்
விலக் கொணாதற மென்ப துணர்ந்தோன்
பொய்ய தாகுஞ் சிறுவழக் கொன்றை
புலனிலாதவர் தம்முடம் பாட்டை
ஐயன் நெஞ்சில் அறமெனக் கொண்டான்
ஐயகோ! அந்த நாள்முதலாகத்
துய்ய சிந்தையர் எத்தனை மக்கள்
துன்பம் இவ்வகை எய்தினர் அம்மா! (178)

முன்பிருந்ததொர் காரணத் தாலே
மூடரே பொய்யை மெய்யென லாமோ?
முன்பெனச் சொல்லும் காலமதற்கு
மூடரே யொர் வரையறை உண்டோ?
முன்பெனச் சொலின் நேற்று முன்பேயாம்

மூன்று கோடி வருடமு முன்பே.
முன்பிருந் தெண்ணி லாது புவிமேல்
மொய்த்த மக்களெல்லா முனி வோரோ? (179)

நீர்பிறக்கு முன் பார்மிசை மூடர்
நேர்ந்ததில்லை என நினைத்தீரோ
பார்பிறந்தது தொட்டின்று மட்டும்
பலப லப்பல பற்பல கோடி
கார்பிறக்கு மழைத்துளி போலே
கண்ட மக்கள் அனைவருள் ளேயும்
நீர்பிறப்பதன் முன்பு மடமை
நீசத் தன்மை இருந்தன அன்றோ? (180)

பொய்யொழுக்கை அறமென்று கொண்டும்
பொய்யர் கேலியைச் சாத்திரம் என்றும்
ஐயகோ நங்கள் பாரத நாட்டில்
அறிவிலார் அறப் பற்று மிக்குள்ளோர்
நொய்ய ராகி அழிந்தவர் கோடி.
நூல்வகை பல தேர்ந்து தெளிந்தோன்
மெய்யறிந்தவர் தம்முள் உயர்ந்தோன்
விதியினால் அத் தருமனும் வீழ்ந்தான். (181)

மதியினும் விதிதான் பெரிதன்றோ?
வைய மீதுள வாகும் அவற்றுள்
விதியிலும் பெரிதோர் பொருளுண்டோ?
மேலை நாஞ்செயும் கர்ம மல்லாதே
நதியிலுள்ள சிறுகுழி தன்னில்
நான்கு திக்கிலிருந்தும் பன்மாசு
பதியுமாறு பிறர் செயும் கர்மப்
பயனு நம்மை அடைவதுண்டன்றோ? (182)

வேறு

மாயச் சூதினுக்கே - ஐயன்
மனமிணங்கி விட்டான்
தாய முருட்டலானார் - அங்கே
சகுனி ஆர்ப்பரித்தான்
நேய முற்ற விதுரன் - போலே
நெறியுளோர்க ளெல்லாம்
வாயை மூடிவிட்டார் - தங்கள்
மதிமயங்கி விட்டார். (183)

அந்தவேளை அதனில் - ஐவர்க்

கதிபனிஃ துரைப்பான்
பந்தயங்கள் சொல்வாய் - சகுனி
பரபரத்தி டாதே
விந்தையான செல்வம் - கொண்ட
வேந்தரோடு நீதான்
வந்தெதிர்த்து விட்டாய் - எதிரே
வைக்க நிதியமுண்டோ? (184)

தருமன்வார்த்தை கேட்டே - துரியோ
தனன் எழுந்து சொல்வான்
அருமையான செல்வம் - என்பால்
அளவிறந்த துண்டு
ஒருமடங்கு வைத்தால் - எதிரே
ஒன்பதாக வைப்பேன்.
பெருமை சொல்ல வேண்டாம் - ஐயா
பின்னடக்கு கென்றான். (185)

ஒருவ னாடப் பணயம் - வேறே
ஒருவன் வைப்ப துண்டோ
தரும மாகுமோடா - சொல்வாய்
தம்பி இந்த வார்த்தை
வரும மில்லை ஐயா - இங்கு
மாம னாடப் பணயம்
மருகன் வைக்கொணாதோ - இதிலே
வந்த குற்றம் ஏதோ (186)

பொழுது போக்குதற்கே - சூதுப்
போர் தொடங்கு கின்றோம்
அழுதல் ஏன்இதற்கே - என்றே
அங்கர் கோன் நகைத்தான்.
பழுதிருப்ப தெல்லாம் - இங்கே
பார்த்தி வர்க்கு ரைத்தேன்
முழுதும் இங்கிதற்கே - பின்னர்
முடிவு காண்பிர் என்றான். (187)

ஒளிசி றந்த மணியின் - மாலை
ஒன்றை அங்கு வைத்தான்.
களிமிகுந்த பகைவன் - எதிரே
கனதனங்கள் சொன்னான்.
விழி இமைக்கு முன்னே - மாமன்
வென்று தீர்த்து விட்டான்.
பழியிலாத தருமன் - பின்னும்
பந்தயங்கள் சொல்வான். (188)

ஆயிரம் குடம்பொன் - வைத்தே
ஆடுவோம் இதென்றான்
மாயம் வல்ல மாமன் - அதனை
வசம தாக்கி விட்டான்.
பாயுமா ஓரெட்டில் - செல்லும்
பார மான பொற்றேர்
தாய முருட்ட லானார் - அங்கே
சகுனி வென்று விட்டான். (189)

பாடல் 157க்கான குறிப்பைக் காண்க

இளைய ரான மாதர் - செம்பொன்
எழிலிணைந்த வடிவும்
வளையணிந்த தோளும் - மாலை
மணிகுலுங்கு மார்பும்
விளையு மின்ப நூல்கள் - தம்மில்
மிக்க தேர்ச்சியோடு
களையிலங்கு முகமும் - சாயல்
கவினு நன்கு கொண்டோர் (190)

ஆயிரக் கணக்கா - ஐவர்க்
கடிமை செய்து வாழ்வோர்
தாய முருட்டலானார் - அந்தச்
சகுனி வென்று விட்டான்.
ஆயிரங் களாவார் - செம்பொன்
அணிகள் பூண்டிருப்பார்
தூயிழைப் பொனாடை - சுற்றும்
தொண்டர் தம்மை வைத்தான். (191)

சோரனங் கவற்றை - வார்த்தை
சொல்லு முன்னர் வென்றான்.
தீர மிக்க தருமன் - உள்ளத்
திடனழிந்தி டாதே
நீரை யுண்ட மேகம் - போலே
நிற்கும் ஆயிரங்கள்
வாரணங்கள் கண்டாய் - போரில்
மறலி ஒத்து மோதும் (192)

என்று வைத்த பணயம் - தன்னை
இழிஞன் வென்றுவிட்டான்.
வென்றி மிக்க படைகள் - பின்னர்
வேந்தன் வைத்திழந்தான்.
நன்றிழைத்த தேர்கள் - போரின்
நடை யுணர்ந்த பாகர்

என்றிவற்றை எல்லாம் - தருமன்
ஈடு வைத்திழந்தான். (193)

எண்ணி லாத கண்டீர் - புவியில்
இணையிலாத வாகும்
வண்ண முள்ள பரிகள் - தம்மை
வைத்திழந்து விட்டான்.
நண்ணு பொற்கடாரம் - தம்மில்
நாலு கோடி வைத்தான்.
கண்ணி ழப்பவன் போல் - அவையோர்
கணமிழந்து விட்டான். (194)

கடாரம் - கொப்பரை

மாடிழந்து விட்டான் - தருமன்
மந்தை மந்தை யாக
ஆடிழந்து விட்டான் - தருமன்
ஆளிழந்து விட்டான்
பீடிழந்த சகுனி - அங்குப்
பின்னும் சொல்லுகின்றான்.
நாடிழக்க வில்லை - தருமா
நாட்டை வைத்திடென்றான். (195)

வேறு

ஐயகோ இதை யாதெனச் சொல்வோம்?
அரசரானவர் செய்குவ தொன்றோ?
மெய்ய தாகவொர் மண்டலத் தாட்சி
வென்று சூதினில் ஆளுங் கருத்தோ?
வைய மிஃது பொறுத்திடுமோ மேல்
வான் பொறுத்திடுமோ பழி மக்காள்
துய்ய சீர்த்தி மதிக்குலமோநாம்
தூஎன்றெள்ளி விதுரனும் சொல்வான். (196)

பாண்டவர் பொறை கொள்ளுவ ரேனும்
பைந்துழாயனும் பாஞ்சாலத் தானும்
மூண்ட வெஞ்சினத்தோடு நஞ்சூழல்
முற்றும் வேரறச் செய்குவ ரன்றோ?
ஈண்டிருக்கும் குருகுல வேந்தர்
யார்க்கும் இஃதுரைப்பேன் குறிக்கொண்மின்.
மாண்டு போரில் மடிந்து நரகில்
மாழ்கு தற்கு வகைசெயல் வேண்டா. (197)

குலமெலாம் அழிவெய்திடற் கன்றோ

குத்திரத் துரியோதனன் தன்னை
நலமிலா விதி நம்மிடை வைத்தான்.
ஞால மீதிலவன் பிறந்தன்றே
அலறி யோர்நரி போற் குரைத்திட்டான்.
அஃது ணர்ந்த நிமித்திகர் வெய்ய
கலகந் தோன்றுமிப் பாலகனாலே
காணுவீரெனச் சொல்லிடக் கேட்டோம். (198)

சூதிற் பிள்ளை கெலித்திடல் கொண்டு
சொர்க்க போகம் பெறுபவன் போலப்
பேதை நீயு முகமலர் வெய்திப்
பெட்பு மிக்குற வீற்றிருக்கின்றாய்.
மீதுசென்று மலையிடைத் தேனில்
மிக்க மோகத்தினால்ஒரு வேடன்
பாதம் ஆங்கு நழுவிட மாயும்
படுமலைச் சரிவுள்ளது காணான். (199)

மற்று நீருமிச் சூதெனும் கள்ளால்
மதிமயங்கி வருஞ்செயல் காணீர்.
முற்றுஞ் சாதி சுயோதன னாமோர்
மூடற் காக முழுகிடலாமோ?
பற்றுமிக்கவிப் பாண்டவர் தம்மை
பாதகத்தில் அழித்திடுகின்றாய்.
கற்ற கல்வியும் கேள்வியும் அண்ணே
கடலில் காயம் கரைத்த தொப்பாமே. (200)

வீட்டுளே நரியை விடப்பாம்பை
வேண்டிப் பிள்ளை யெனவளர்த் திட்டோம்.
நாட்டுளே புகழ் ஓங்கிடு மாறிந்
நரியை விற்றுப் புலிகளைக் கொள்வாய்.
மோட்டுக் கூகையைக் காக்கையை விற்று
மொய்ம்பு சான்ற மயில்களைக் கொள்வாய்
கேட்டிலே களி யோடு செல்வாயோ?
கேட்கும் காதும் இழந்து விட்டாயோ? (201)

தம்பி மக்கள் பொருள் வெஃகுவாயோ,
சாதற் கான வயதினில் அண்ணே?
நம்பி நின்னை அடைந்தவர் அன்றோ?
நாதன் என்றுனைக் கொண்டவர் அன்றோ?
எம்பிரான் உளங் கொள்ளுதியாயின்
யாவுந் தானமெனக் கொடுப்பாரே!
கும்பி மாநரகத்தில் ஆழ்த்தும்
கொடிய செய்கை தொடர்வதும் என்னே? (202)

குருகுலத் தலைவன் சபைக்கண்ணே
கொற்ற மிக்க துரோணன் கிருபன்
பெருகு சீர்த்தியக் கங்கையின் மைந்தன்
பேதை நானு மதிப்பிழந்தேக
திருகு நெஞ்சச் சகுனி ஒருவன்
செப்பு மந்திரம் செல்லுதல் நன்றே!
அருகு வைக்கத் தகுதி யுள்ளானோ?
அவனை வெற்பிடைப் போக்குதி அண்ணே! (203)

நெறி யிழந்தபின் வாழ்வதில் இன்பம்
நேரும் என்று நினைந்திடல் வேண்டா.
பொறியிழந்த சகுனியின் சூதால்
புண்ணியர் தமை மாற்றலராக்கிச்
சிறியர் பாதகர் என்றுல கெல்லாம்
சீயென்றேச உகந்தரசாளும்
வறிய வாழ்வை விரும்பிட லாமோ?
வாழி சூதை நிறுத்துதி என்றான். (204)

முதற் பாகம் முற்றிற்று

இரண்டாம் பாகம்

பராசக்தி வணக்கம்

ஆங்கொரு கல்லை வாயிலில் படியென்
றமைத்தனன் சிற்பி மற்றொன்றை
ஓங்கிய பெருமைக் கடவுளின் வடிவென்
றுயர்த்தினான்; உலகினோர் தாய்நீ;
யாங்கணே எவரை எவ்விதம் சமைத்தற்
கெண்ணமோ அவ்விதம் சமைப்பாய்.
ஈங்குனைச் சரணென்றெய்தினேன் என்னை
இருங்கலைப் புலவனாக்குதியே. (1)

ஸரஸ்வதி வணக்கம்

இடையின்றி அணுக்களெல்லாம் சுழலுமென
இயல்நூலார் இசைத்தல் கேட்டோம்
இடையின்றிக் கதிர்களெல்லாம்
சுழலுமென வான்நூலார் இயம்புகின்றார்
இடையின்றித் தொழில்புரிதல் உலகினிடைப்
பொருட்கெல்லாம் இயற்கையாயின்
இடையின்றிக் கலைமகளே உனதருளில்
எனதுள்ளம் இயங்கொண்ணாதோ. (2)

மூன்றாவது

அடிமைச் சருக்கம்

அறிவு சான்ற விதுரன்சொல் கேட்டான்
அழலு நெஞ்சின் அரவை உயர்த்தான்
நெறி உரைத்திடு மேலவர் வாய்ச்சொல்
நீசரானவர் கொள்ளுவ துண்டோ
பொறி பறக்க விழிகளிரண்டும்
புருவ மாங்குத் துடிப்பச் சினத்தின்
வெறிதலைக்க மதிமழுங்கிப்போய்
வேந்த னிஃதுரைத்திட லுற்றான். (3)

வேறு

விதுரன் சொல்லியதற்குத் துரியோதனன் மறுமொழி சொல்லுதல்

நன்றி கெட்ட விதுரா - சிறிதும்
நாண மற்ற விதுரா
தின்ற உப்பினுக்கே - நாசம்
தேடுகின்ற விதுரா
அன்று தொட்டு நீயும் - எங்கள்
அழிவு நாடுகின்றாய்
மன்றில் உன்னை வைத்தான் - எந்தை
மதியை யென்னுரைப்பேன்! (4)

ஐவருக்கு நெஞ்சும் - எங்கள்
அரண்மனைக்கு வயிறும்
தெய்வமன் றுனக்கே - விதுரா
செய்து விட்டதேயோ
மெய்வகுப்ப வன்போல் - பொதுவாம்
விதியுணர்ந்த வன்போல்
ஐவர்பக்கம் நின்றே - எங்கள்
அழிவு நாடு கின்றாய். (5)

மன்னர் சூழ்ந்த சபையில் - எங்கள்
மாற்றலர் களோடே
முன்னர் நாங்கள் பணயம் - வைத்தே
முறையில் வெல்லுகின்றோம்.
என்ன குற்றம் கண்டாய்? - தருமம்
யார்க்குரைக்க வந்தாய்?
கன்னம் வைக்கிறோமா - பல்லைக்
காட்டி ஏய்க்கிறோமா? (6)

பொய்யுரைத்து வாழ்வார் - இதழில்
புகழுரைத்து வாழ்வார்
வையமீதிலுள்ளார் - அவர்தம்
வழியில் வந்ததுண்டோ?
செய்கொணாத செய்வார் - தம்மை
சீருறுத்த நாடி
ஐயநீ யெழுந்தால் - அறிஞர்
அவல மெய்தி டாரோ? (7)

அன்பிலாத பெண்ணுக் - கிதமே
ஆயிரங்கள் செய்தும்
முன்பி னெண்ணுவாளோ? - தருணம்
மூண்ட போது கழிவாள்
வன்புரைக்க வேண்டா - எங்கள்
வலிபொ றுக்க வேண்டா
இன்ப மெங்க ணுண டோ - அங்கே
ஏகிடென்றுரைத்தான். (8)

விதுரன் சொல்வது

வேறு

நன்றாகும் நெறியறியா மன்னனாங்கு
நாலுதிசை அரசர் சபை நடுவே தன்னைக்
கொன்றாலும் ஒப்பாகா வடுச்சொல் கூறி
குமைவதிலே அணுவளவும் குழப்பம் எய்தான்
சென்றாலும் நின்றாலும் இனியென்னேடா
செய்கைநெறி யறியாத சிறியாய் நின்னைப்
பொன்றாத வழிசெய்ய முயன்று பார்த்தேன்
பொல்லாத விதியென்னைப் புறங்கண்டானால் (9)

கடுஞ்சொற்கள் பொறுக்காத மென்மைக் காதும்
கருங்கல்லில் விஷம்தோய்ந்த நெஞ்சும் கொண்டோர்
படுஞ்செய்தி தோன்றுமுன்னே படுவர் கண்டாய்
பால்போலும் தேன்போலும் இனிய சொல்வோர்
இடும்பைக்கு வழிசொல்வார் நன்மை காண்பார்
இளகுமொழி கூறார்கள் என்றினைத்தே தானும்
நெடும்பச்சை மரம்போலே வளர்ந்து விட்டாய்
நினக்கெவரும் கூறியவர் இல்லை கொல்லோ? (10)

நலங்கூறி இடித்துரைப்பார் மொழிகள் கேளா
நரபதி நின் அவைக்களத்தே அமைச்ச ராக
வலங்கொண்ட மன்னரொடு பார்ப்பார் தம்மை

வைத்திருத்தல் சிறிதேனும் தகாது கண்டாய்
சிலங்கைப்பொன் கச்சணிந்த வேசை மாதர்
சிறுமைக்கே தலைகொடுத்த தொண்டர் மற்றும்
குலங்கெட்ட புலைநீசர் முடவர் பித்தர்
கோமகனே நினக்குரிய அமைச்சர் கண்டாய் (11)

சலங்கை. சிலங்கை என்பது மலையாள வடிவம்.

சென்றாலும் நின்றாலும் இனியென் னேடா
செப்புவன நினக்கென நான் செப்பினேனோ
மன்றாற நிறைந்திருக்கு மன்னர் பார்ப்பார்
மதியில்லா மூத்தோனும் அறியச் சொன்னேன்
இன்றோடு முடிகுவதோ வருவதெல்லாம்
யானறிவேன் வீட்டுமனும் அறிவான் கண்டாய்
வென்றானுள் ளாசையெலாம் யோகியாகி
வீட்டுமனும் ஒன்றுரையா திருக்கின் றானே! (12)

விதிவழிநன் குணர்ந்திடினும் பேதை யேன்யான்
வெள்ளை மனமுடைமையினால் மகனே யுன்றன்
சதிவழியைத் தடுத்துரைகள் செய்யப் பார்த்தேன்
சரிசரியிங் கேதுரைத்தும் பயனொன்றி ல்லை
மதிவழியே செல்லுகென விதுரன் கூறி
வாய்மூடித் தலைகவிழ்ந்து இருக்கை கொண்டான்
பதியுறுவோம் புவியிலென்று கலிம கிழ்ந்தான்
பாரதப்போர் வருமென்று தேவ ரார்த்தார். (13)

சூது மீட்டுந் தொடங்குதல்

வேறு

காயுருட்டலானார் - சூதுக் - களிதொடங்கலானார்
மாயமுள்ள சகுனி - பின்னும் - வார்த்தை சொல்லு கின்றான்
நீயழித்த தெல்லாம் - பின்னும் - நின்னிடத்தில் எய்தும்
ஓய்வடைந் திடாதே - தருமா - ஊக்க மெய்து கென்றான். (14)

கோயிற் பூசை செய்வோர் - சிலையைக் - கொண்டுவிற்றல் போலும்
வாயிற் காத்து நிற்போர் - வீட்டை - வைத்திழத்தல் போலும்
ஆயிரங்க ளான - நீதி - அவையுணர்ந்த தருமன்
தேயம்வைத் திழந்தான் - சிச்சீ - சிறியர் செய்கை செய்தான். (15)

நாட்டுமாந்த ரெல்லாம் - தம்போல் - நரர்களென்று கருதார்
ஆட்டுமந்தை யாமென் - றுலகை - அரச ரெண்ணி விட்டார்
காட்டுமுண்மை நூல்கள் - பலதாங் - காட்டினார்க ளேனும்
நாட்டுராஜ நீதி - மனிதர் - நன்கு செய்ய வில்லை. (16)

ஓரஞ்செய்தி டாமே - தருமத் - துறுதி கொன்றி டாமே
சோரஞ்செய்தி டாமே - பிறரைத் - துயரில் வீழ்த்தி டாமே
ஊரையாளும் முறைமை - உலகில் - ஒருபுறத்துமில்லை
சாரமற்ற வார்த்தை - மேலே - சரிதை சொல்லு கின்றோம். (17)

சகுனி சொல்வது

வேறு

செல்வமுற் றிழந்து விட்டாய் - தருமா
தேசமுங் குடிகளும் சேர்த்திழந்தாய்
பல்வளம் நிறைபுவிக்கே - தருமன்
பார்த்திவ னென்பதினிப் பழங்கதைகாண்
சொல்வ தொருபொருள் கேட்பாய் - இன்னும்
சூழ்ந்தொரு பணயம் வைத்தாடுதியேல்
வெல்வதற் கிடமுமுண்டாம் - ஆங்கவ்
வெற்றியி லனைத்தையும் மீட்டிடலாம் (18)

எல்லா மிழந்த பின்னர் - நின்றன்
இளைஞரு நீருமற் றெதிற் பிழைப்பீர்?
பொல்லா விளையாட்டில் - பிச்சை
புகநினை விடுவதை விரும்புகிலோம்
வல்லார் நினதிளைஞர் - சூதில்
வைத்திடத் தகுந்தவர் பணயமென்றே.
சொல்லால் உளம் வருந்தேல் - வைத்துத்
தோற்றதை மீட்டென்று சகுனிசொன்னான். (19)

வேறு

கருணனுஞ் சிரித்தான் - சபையோர்
கண்ணினீ ருதிர்த்தார்
இருணிறைந்த நெஞ்சன் - களவே
இன்பமென்று கொண்டான்
அரவு யர்த்த வேந்தன் - உவகை
ஆர்த்தெழுந்து சொல்வான்
பரவு நாட்டையெல்லாம் - எதிரே
பணயமாக வைப்போம். (20)

தம்பிமாரை வைத்தே - ஆடித்
தருமன் வென்று விட்டால்
முன்புமாமன் வென்ற - பொருளை
முழுது மீண்டளிப்போம்
நம்பிவேலை செய்வோம் - தருமா

நாடிழந்த பின்னால்
அம்பினொத்த விழியாள் - உங்கள்
ஐவருக்கு முரியாள் (21)

அவளி கழ்ந்திடாளோ - அந்த
ஆயன் பேசுவானோ
கவலை தீர்த்துவைப்போம் - மேலே
களிநடக்கு கென்றான்
இவள வானபின்னும் - இளைஞர்
ஏதும் வார்த்தை சொல்லார்
துவளு நெஞ்சினாராய் - வதனந்
தொங்க வீற்றிருந்தார். (22)

வீமன் மூச்சு விட்டான் - முழையில்
வெய்ய நாகம் போலே
காம னொத்த பார்த்தன் - வதனக்
களையிழந்து விட்டான்
நேம மிக்க நகுலன் - ஐயோ
நினைவயர்ந்து விட்டான்
ஊமை போலிருந்தான் - பின்னோன்
உண்மை முற்றுணர்ந்தோன். (23)

கங்கை மைந்த னங்கே - நெஞ்சம்
கனலுறத் துடித்தான்
பொங்கு வெஞ்சினத்தால் - அரசர்
புகையுயிர்த் திருந்தார்
அங்க நொந்துவிட்டான் - விதுரன்
அவல மெய்திவிட்டான்
சிங்க மைந்தை நாய்கள் - கொல்லும்
செய்தி காணலுற்றே. (24)

ஸஹதேவனைப் பந்தயங் கூறுதல்

வேறு

எப்பொழு தும்பிர மத்திலே - சிந்தை
ஏற்றி உலகமோர் ஆடல்போல் - எண்ணித்
தப்பின்றி இன்பங்கள் துய்த்திடும் - வகை
தானுணர்ந் தான்சஹ தேவனாம் - எங்கும்
ஒப்பில் புலவனை ஆட்டத்தில் - வைத்தல்
உன்னித் தருமனும் பணயமென் - றங்குச்
செப்பினன் காயை யுருட்டினான் - அந்தத்
தீய சகுனி கெலித்திட்டான். (25)

நகுலனை இழத்தல்
சகுனி சொல்வது

நகுலனை வைத்தும் இழந்திட்டான் - அங்கு
நள்ளிருட் கண்ணொரு சிற்றொளி - வந்து
புகுவது போலவன் சிந்தையில் - என்ன
புன்மை செய்தோமென எண்ணினான் - அவ்வெண்ணம்
மிகுவதன் முன்பு சகுனியும் - ஐய!
வேறொரு தாயிடைப் பிறந்தவர் - வைக்கத்
தகுவரென் றிந்தச் சிறுவரை - வைத்துத்
தாயத்திலே இழந்திட்டனை. (26)

திண்ணிய வீமனும் பார்த்தனும் - குந்தி
தேவியின் மக்களுனை யொத்தே - நின்னிற்
கண்ணிய மிக்கவர் என்றவர் - தமைக்
காட்டுதற் கஞ்சினை போலும்நீ - என்றப்
புண்ணியத் தருமனை நோக்கியே - அந்தப்
புல்லன் உரைத்திடு போதினில் - தர்மன்
துண்ணென வெஞ்சின மெய்தியே - அட
சூதில் அரசிழந்தேகினும் (27)

தர்மன் சொல்வது
பார்த்தனை இழத்தல்

எங்களில் ஒற்றுமை தீர்ந்திடோம் - ஐவர்
எண்ணத்தில் ஆவியில் ஒன்றுகாண் - இவர்
பங்கமுற்றே பிரிவெய்துவார் - என்று
பாதகச் சிந்தனை கொள்கிறாய் - அட
சிங்கமறவர் தமக்குள்ளே - வில்லுத்
தேர்ச்சியிலே நிகரற்றவன் - எண்ணில்
இங்குப் புவித்தல மேழையும் - விலை
என்னக் கொள்ளத் தகாதவன் (28)

கண்ணனுக் காருயிர்த் தோழனாம் - எங்கள்
கண்ணிலும் சால இனியவன் - அவன்
வண்ணமும் திண்மையும் சோதியும் - பெற்று
வானத் தமரரைப் போன்றவன் - அவன்
எண்ணிலா நற்குணஞ் சான்றவன் - புகழ்
ஏறும் விஜயன் பணயங்காண் - பொய்யில்
பண்ணிய காயை உருட்டுவாய் - என்று
பார்த்திவன் விம்மி உரைத்தனன். (29)

மாயத்தை யேஉருவாக்கிய - அந்த
மாமனும் நெஞ்சில் மகிழ்வுற்றே - கெட்ட

தாயத்தைக் கையினிற் பற்றினான் - பின்பு
சாற்றி விருத்தமங் கொன்றையே - கையில்
தாயமுருட்டி விழுத்தினான் - அவன்
சாற்றியதே வந்து விழுந்ததால் -வெறும்
ஈயத்தைப் பொன்னென்று காட்டுவோர் - மன்னர்
இப்புவி மீதுள ராமன்றோ? (30)

வீமனை இழுத்தல்

கொக்கரித் தார்த்து முழங்கியே - களி
கூடிச் சகுனியுஞ் சொல்லுவான் - எட்டுத்
திக்கனைத்தும் வென்ற பார்த்தனை - வென்று
தீர்த்தனம் வீமனைக் கூறென்றான் - தர்மன்
தக்கது செய்தல் மறந்தனன் - உளஞ்
சார்ந்திடு வெஞ்சின வெள்ளத்தில் - எங்கும்
அக்கரை யிக்கரை காண்கிலன் - அறத்
தண்ண லிதனை யுரைக்கின்றான் - (31)

ஐவர் தமக்கொரு தலைவனை - எங்கள்
ஆட்சிக்கு வேர்வலி யஃதினை - ஒரு
தெய்வமுன் னேநின் றெதிர்ப்பினும் - நின்று
சீறியடிக்கும் திறலனை - நெடுங்
கைவளர் யானை பலவற்றின் - வலி
காட்டிடும் வெந்திறல் வீமனை - உங்க ள்
பொய்வளர் சூதில் வைத்திட்டேன் - வென்று
போவென் றுரைத்தனன் பொங்கியே. (32)

போரினில் யானை விழக்கண்ட - பல
பூதங்கள் நாய்நரி காகங்கள் - புலை
ஓரி கழுகென் றிவையெலாம் - தம
துள்ளம் களிகொண்டு விம்மல்போல் - மிகச்
சீரிய வீமனைச் சூதிலே - அந்தத்
தீயர் விழுத்திடக் காணலும் - நின்று
மார்பிலும் தோளிலும் கொட்டினார் - களி
மண்டிக் குதித்தெழுந்தாடுவார். (33)

தருமன் தன்னைத் தானே பணயம் வைத்திழத்தல்

மன்னவர் தங்களை மறந்துபோய் - வெறி
வாய்த்த திருடரை ஒத்தனர் - அங்குச்
சின்னச் சகுனி சிரிப்புடன் - இன்னும்
செப்புக பந்தயம் வேறென்றான் - இவன்
தன்னை மறந்தவ னாதலால் - தன்னைத்
தான்பண யம்மென வைத்தனன் - பின்பு

முன்னைக் கதையன்றி வேறுண்டோ - அந்த
மோசச் சகுனி கெலித்தனன் (34)

துரியோதனன் சொல்வது

பொங்கி யெழுந்து சுயோதனன் - அங்குப்
பூதல மன்னர்க்குச் சொல்லுவான் - ஒளி
மங்கி யழிந்தனர் பாண்டவர் - புவி
மண்டலம் நம்ம தினிக்கண்டீர் - இவர்
சங்கை யிலாத நிதியெலாம் - நம்மைச்
சார்ந்தது வாழ்த்துதிர் மன்னர்காள் - இதை
எங்கும் பறையறை வாயடா - தம்பி
என்றது கேட்டுச் சகுனிதான், (35)

சங்கை - அளவு

புண்ணிடைக் கோல்கொண்டு குத்துதல் - நின்னைப்
போன்றவர் செய்திடத் தகுவதோ? - இரு
கண்ணி லினியவ ராமென்றே - இந்தக்
காளையர் தம்மை இங்குந்தைதான் - நெஞ்சில்
எண்ணியிருப்ப தறிகுவாய் - இவர்
யார்நின்றன் சோதர ரல்லரோ - களி
நண்ணித் தொடங்கிய சூதன்றோ - இவர்
நாணுறச் செய்வது நேர்மையோ? (36)

இன்னும் பணயம் வைத்தாடுவோம் - வெற்றி
இன்னு மிவர்பெற லாகுங்காண்
பொன்னும குடிகளும் தேசமும் - பெற்று
பொற் புடன் போதற்கிட முண்டாம் - ஒளி
மின்னும் அமுதமும் நிகர்த்தவள் - இவர்
மேவிடும் தேவியை வைத்திட்டால் - அவள்
துன்னும் அதிட்டமுடையவள் - இவர்
தோற்ற தனைத்தையும் மீட்டலாம் (37)

என்றந்த மாமன் உரைப்பவே - வளர்
இன்ப மனத்திடை யுடையனாய் - மிக
நன்றுநன் றென்று சுயோதனன் - சிறு
நாயொன்று தேன்க லசத்தினை - எண்ணித்
துன்றுமு வகையில் வெற்றுநா - வினைத்
தோய்த்துச் சுவைத்து மகிழ்தல்போல் - அவன்
ஒன்றுரையா திருந்திட்டான் - அழி
வுற்ற துலகத் தறமெலாம். (38)

மூன்றாவது அடிமைச் சருக்கம் முற்றும்

நான்காவது

துகிலுரிதற் சருக்கம்

திரௌபதியை இழத்தல்

பாவியர் சபைதனிலே - புகழ்ப்
பாஞ்சால நாட்டவர் தவப்பயனை
ஆவியி லினியவளை - உயிர்த்
தணிசுமந் துலவிடு செய்யமுதை
தேவியை நிலத்திருவை - எங்குந்
தேடினும் கிடைப்பரும் திரவியத்தை
ஓவியம் நிகர்த்தவளை - அரு
ளொளியினை கற்பனைக் குயிரதனை (39)

படிமிசை யிசையுறவே - நடை
பயின்றிடுந் தெய்வீக மலர்க்கொடியை
கடிகமழ் மின்னுருவை - ஒரு
கமனியக் கனவினைக் காதலினை
வடிவுறு பேரழகை - இன்ப
வளத்தினைச் சூதினில் பணயமென்றே
கொடியவர் அவைக்களத்தில் - அறக்
கோமகன் வைத்திடல் குறித்துவிட்டான் (40)

கமனியம் - கண்டார் விரும்பும்

வேறு

வேள்விப் பொருளினையே - புலைநாயின்முன்
மென்றிட வைப்பவர்போல்
நீள்விட்டப் பொன்மாளிகை - கட்டிப்பேயினை
நேர்ந்து குடியேற்றலைப்போல்
ஆள்விற்றுப் பொன்வாங்கியே - செய்தபூணையோர்
ஆந்தைக்குப் பூட்டுதல்போல்
கேள்விக் கொருவரில்லை - தேவியைக்
கீழ்மக்கட் காளாக்கினான். (41)

செருப்புக்குத் தோல்வேண்டியே - இங்குக்கொல்வாரோ
செல்வக் குழந்தையினை
விருப்புற்ற சூதினுக்கே - ஒத்த பந்தயம்
மெய்த்தவப் பாஞ்சாலியோ
ஒருப்பட்டுப் போனவுடன் - கெட்டமாமனும்
உன்னியத் தாயங் கொண்டே
இருப்பகடை போடென்றான் -பொய்மைக்காய்களும்
இருப்பகடை போட்டவே. (42)

திரௌபதி சூதில் வசமானது பற்றிக் கௌரவர் கொண்ட மகிழ்ச்சி வேறு

திக்குக் குலுங்கிடவே எழுந்தாடுமாம்
தீயவர் கூட்டமெல்லாம்
தக்குத் தக்கென்றே அவராடுவார்
தம்மிரு தோள்கொட்டுவார்
ஒக்கும் தருமனுக்கே இஃதென்பார்
ஓஓவென் றிரைந்திடுவார்
கக்கக் கென்றே நகைப்பார் துரியோதனா
கட்டிக்கொள் எம்மை யென்பார் (43)

மாமனைத் தூக்காயென்பார் அந்த
மாமன்மேல் மாலைபல வீசுவார்
சேமத் திரவியங்கள் பலநாடுகள்
சேர்ந்ததில் ஒன்றுமில்லை
காமத் திரவியமாம் இந்தப்பெண்ணையும்
கைவசமாகச் செய்தான்
மாமனோர் தெய்வமென்பார் துரியோதனன்
வாழ்கவென் றார்த்திடுவார். (44)

துரியோதனன் சொல்வது

நின்றுதுரி யோதனன் - அந்தமாமனை
நெஞ்சோடு சேரக்கட்டி
என்துயர் தீர்த்தாயடா - உயிர்மாமனே
ஏளனந் தீர்த்துவிட்டாய்
அன்று நகைத்தாளடா - உயிர்மாமனே
அவளை என்னாளாக்கினாய்
என்றும் மறவேனடா - உயிர்மாமனே
என்னகைம்மாறு செய்வேன். (45)

ஆசைதணித்தாயடா - உயிர்மாமனே
ஆவியைக் காத்துவிட்டாய்
நாசமடைந்ததடா - உயிர்மாமனே
நாமினி வாழ்ந்தோமடா
பூசைபுரிவோமடா - உயிர்மாமனே
பொங்கல் உனக்கிடுவோம்
பேசவுந்தோன்றுதில்லை - உயிர்மாமனே
பேரின்பங் கூட்டிவிட்டாய். (46)

என்றுபல சொல்லுவான் - துரியோதனன்
எண்ணியெண்ணிக் குதிப்பான்

குன்று குதிப்பதுபோல் - துரியோதனன்
கொட்டிக் குதித்தாடுவான்
மன்று குழப்பமுற - அவர்யாவரும்
வகைதொகை ஏதுமின்றி
அன்று புரிந்ததெல்லாம் - என்பாட்டிலே
ஆக்கல் எளிதாகுமோ. (47)

திரௌபதியைத் துரியோதனன் மன்றுக்கு அழைதுவ வரச் சொல்லியது பற்றி ஜகத்தில் உண்டான அதர்மக் குழப்பம்

வேறு

தருமம் அழிவெய்த சத்தியமும் பொய்யாக
பெருமைத் தவங்கள் பெயர்கெட்டு மண்ணாக (48)

வானத்து தேவர் வயிற்றிலே தீப்பாய
மோனமுனிவர் முறைகெட்டுத் தாமயங்க (49)

வேதம் பொருளின்றி வெற்றுரையே ஆகிவிட
நாதம் குலைந்து நடுமையின்றிப் பாழாக (50)

கந்தருவர் எல்லோரும் களையிழக்கச் சித்தர்முதல்
அந்தரத்து வாழ்வோர் அனைவோரும் பித்துறவே (51)

நான்முகனார் நாவடைக்க நாமகட்கு புத்திகெட
வான்முகிலைப் போன்றதொரு வண்ணத் திருமாலும் (52)

அறிதுயில்போய் மற்றாங்கே ஆழ்ந்ததுயில் எய்திவிட
செறிதருநற் சீரழகு செல்வமெல்லாம் தானாகும் (53)

சீதேவி தன்வதனம் செம்மைபோய்க் காரடைய
மாதேவன் யோகம் மதிமயக்க மாகிவிட (54)

வாலை உமாதேவி மாகாளி வீருடையாள்
மூலமா சக்தியொரு மூவிலைவேல் கையேற்றாள் (55)

மாயை தொலைக்கும் மஹாமாயை தானாவாள்
பேயைக் கொலையைப் பிணக்குவையைக் கண்டுவப்பாள் (56)

சிங்கத்தி லேறி சிரிப்பால் உலகழிப்பாள்*
சிங்கத்த லேறி சிரித்தெவையும் காத்திடுவாள் (57)

*பல பதிப்புகளில் இந்த வரி விடுபட்டுப் போயிருக்கிறது. சீனி. விசுவநாதன் மற்றும் தஞ்சைப் பல்கலைக்கழகப் பதிப்புகளில் மட்டும் காணப் படுகிறது. விடுபட்டது தவறு என்று தஞ்சைப் பல்கலைக்கழகப் பதிப்பு கூறுகிறது.

நோவும் கொலையும் நுவலொணாப் பீடைகளும்
சாவும் சலிப்புமென தான்பல் கணமுடையாள் (58)

கடாஎருமை ஏறும் கருநிறத்துக் காலனார்
இடாது பணிசெய்ய இலங்கு மஹாராணி (59)

மங்களம் செல்வம் வளர்வாழ்நாள் நற்கீர்த்தி
துங்கமுறு கல்வியெனச் சூழும் பலகணத்தாள் (60)

ஆக்கம் தானாவாள் அழிவு நிலையாவாள்
போக்கு வரவெய்தும் புதுமையெலாம் தானாவாள் (61)

மாறிமாறிப் பின்னும் மாறிமாறிப் பின்னும்
மாறிமாறிப் போகும் வழக்கமே தானாவாள் (62)

ஆதிபரா சக்தி அவள்நெஞ்சம் வன்மையுற
சோதிக் கதிர்விடுக்கும் சூரியனாம் தெய்வத்தின் (63)

முகத்தே இருள்படர

துரியோதனன் விதுரனை நோக்கி உரைப்பது

மூடப்புலைமையினோன்
அகத்தே இருளுடையோன் ஆரியரின் வேறானோன் (64)

துரியோ தனனும் சுருக்கெனவே தான்திரும்பி
அரியோன் விதுரன் அவனுக் குரைசெய்வான். (65)

செல்வாய் விதுராநீ சிந்தித் திருப்பதேன்
வில்வாள் நுதலினாள் மிக்க எழிலுடையாள் (66)

முன்னே பாஞ்சாலர் முடிவேந்தன் ஆவிமகள்
இன்னேநாம் சூதில் எடுத்த விலைமகள்பால் (67)

சென்று விளைவெல்லாம் செவ்வனே தானுணர்த்தி
மன்றிடை உள்ளான்நின் மைத்துனன்நின் ஓர்தலைவன் (68)

(இதுவரையில் உனக்கு ஐந்து தலைவர்கள். இனிமேல் அத்தனைச் சிரமமில்லை. நான் ஒருவனே தலைவன் என்பது குறிப்பு.)

நின்னை அழைக்கிறான் நீள்மனையின் ஏவலுக்கே
என்ன உரைத்தவளை இங்குக்கொணர்வாய் என்றான். (69)

விதுரன் சொல்வது

துரியோதனன் இச்சுடுசொற்கள் கூறிடவும்
பெரியோன் விதுரன் பெரிதும் சினங்கொண்டு (70)

மூட மகனே மொழியொணா வார்த்தைகளைக்
கேடு வரல் அறியாய் கீழ்மையினால் சொல்லிவிட்டாய். (71)

புள்ளிச் சிறுமான் புலியைப்போய்ப் பாய்வதுபோல்
பிள்ளைத் தவளை பெரும்பாம்பை மோதுதல்போல் (72)

ஐவர் சினத்தின் அழலை வளர்க்கின்றாய்
தெய்வத் தவத்தியைச் சீர்குலையப் பேசுகின்றாய். (73)

நின்னுடைய நன்மைக்கிந் நீதியெலாம் சொல்லுகின்றேன்
என்னுடைய சொல்வே றெவர்பொருட்டும் இல்லையடா! (74)

பாண்டவர்தாம் நாளைப் பழியிதனைத் தீர்த்திடுவார்
மாண்டு தரைமேல் மகனே கிடப்பாய்நீ. (75)

தன்னழிவு நாடும் தறுகண்மை என்னேடா?
முன்னமொரு வேனன் முடிந்த கதை கேட்டிலையோ? (76)

நல்லோர் தமதுள்ளம் நையச்செயல் செய்தான்
பொல்லாத வேனன் புழுவைப்போல் மாய்ந்திட்டான். (77)

நெஞ்சஞ் சுடஉரைத்தல் நேர்மையெனக் கொண்டாயோ?
மஞ்சனே அச்சொல் மருமத்தே பாய்வதன்றோ? (78)

கெட்டார்தம் வாயில் எளிதே கிளைத்துவிடும்
பட்டார்தம் நெஞ்சில் பலநாள் அகலாது. (79)

வெந்நரகு சேர்த்துவிடும் வித்தை தடுத்துவிடும்
மன்னவனே நொந்தோர் மனஞ்சுடவே சொல்லுஞ்சொல் (80)

சொல்லிவிட்டேன் பின்னொருகால் சொல்லேன் கவுரவர்காள்!
புல்லியர்கட் கின்பம் புவித்தலத்தில் வாராது! (81)

பேராசை கொண்டு பிழைச்செயல்கள் செய்கின்றீர்
வாராத வன்கொடுமை மாவிபத்து வந்துவிடும் (82)

பாண்டவர்தம் பாதம் பணிந்தவர்பால் கொண்டதெல்லாம்
மீண்டவர்க் கோஈந்து விட்டு, விநயமுடன் (83)

ஆண்டவரே! யாங்கள் அறியாமை யாற்செய்த
நீண்ட பழியிதனை நீர்பொறுப்பீர் என்றுரைத்து (84)

மற்றவரைத் தங்கள் வளநகர்க்கே செல்லவிடீர்
குற்றம் தவிர்க்கும் நெறியிதனைக் கொள்ளீரேல் (85)

மாபா ரதப்போர் வரும்நீர் அழிந்திடுவீர்,
பூபாலரே! என்றந்தப் புண்ணியனும் கூறினான் (86)

சொல்லிதனைக் கேட்டு துரியோதன மூடன்
வல்லிடிபோல் சீச்சி! மடையா! கெடுகநீ! (87)

எப்போதும் எம்மைச் சபித்தல் இயல்புனக்கே
இப்போதுன் சொல்லை எவரும் செவிக்கொள்ளார் (88)

யாரடா தேர்ப்பாகன் நீபோய்க் கணமிரண்டில்
பாரதர்க்கு வேந்தன் பணித்தான் எனக்கூறி (89)

பாண்டவர்தம் தேவியினைப் பார்வேந்தர் சபைமுன்னே
ஈண்டழைத்து வாவென் றியம்பினான் மற்றத்தேர்ப் (90)

பாகன் விரைந்துபோய் பாஞ்சாலி வாழ்மனையில்
சோகம் ததும்பித் துடித்த குரலுடனே (91)

அம்மனே போற்றி! அறங்காப்பாய், தாள்போற்றி!
வெம்மை உடைய விதியால் யுதிட்டிரனார் (92)

மாமன் சகுனியொடு மாயச் சூதாடியதில்
பூமி இழந்து பொருளிழந்து தம்பியரைத் (93)

தோற்றுத் தமது சுதந்திரமும் வைத்திழந்தார்
சாற்றிப் பணயமெனத் தாயே உனைவைத்தார் (94)

சொல்லவுமே நாவு துணியவில்லை! தோற்றிட்டார்.
எல்லாரும் கூடி இருக்கும் சபைதனிலே (95)

நின்னை அழைத்துவர நேமித்தான் எம்மரசன்
என்ன உரைத்திடலும் யார்சொன்ன வார்த்தையடா! (96)

சூதர் மனையினிலே தொல்சீர் மறக்குலத்து
மாதர் வருதல் மரபோடா? யார்பணியால் (97)

என்னை அழைக்கின்றாய்? என்றாள் அதற்கவனும்
மன்னன் சுயோதனன்தன் வார்த்தையினால் என்றிட்டான் (98)

நல்லதுநீ சென்று நடந்தகதை கேட்டுவா.
வல்லசகுனிக்கு மாண்பிழந்த நாயகர்தாம் (99)

என்னைமுன் னேகூறி இழந்தாரா? தம்மையே
முன்னம் வைத்து முடித்தென்னைத் தோற்றாரா? (100)

சென்று சபையில் இச்செய்தி தெரிந்துவா
என்றவளுங் கூறி இவன்போ கியபின்னர் (101)

தன்னந் தனியே தவிக்கு மனத்தாளாய்,
வன்னங் குலைந்து மலர்விழிகள் நீர்சொரிய, (102)

உள்ளத்தை அச்சம் உலைவுறுத்தப் பேய்கண்ட
பிள்ளைபோல் வீற்றிருந்தாள். பின்னந்தத் தேர்ப்பாகன் (103)

மன்னன் சபைசென்று வாள்வேந்தே! ஆங்கந்தப்
பொன்னரசி தாள்பணிந்து போதருவீர் என்றிட்டேன். (104)

என்னை முதல்வைத் திழந்தபின்பு தன்னைஎன்
மன்னர் இழந்தாரா? மாறித் தமைத்தோற்ற (105)

பின்னர்எனைத் தோற்றாரா? என்றேநும் பேரவையை
மின்னற் கொடியார் வினவிவரத் தாம் பணித்தார். (106)

வந்துவிட்டேன் என்றுரைத்தான். மாண்புயர்ந்த பாண்டவர்தாம்
நொந்துபோய் ஒன்றும் நுவலாதிருந்துவிட்டார். (107)

மற்றும் சபைதனிலே வந்திருந்த மன்னரெல்லாம்
முற்றும் உரையிழந்து மூங்கையர்போல் வீற்றிருந்தார். (108)

துரியோதனன் சொல்வது

வேறு

உள்ளந் துடித்துச் சுயோதனன் - சினம்
ஓங்கி வெறிகொண்டு சொல்லுவான் - அட,
பிள்ளைக் கதைகள் விரிக்கிறாய் - என்றன்
பெற்றி அறிந்திலை போலும்நீ! - அந்தக்
கள்ளக் கரிய விழியினாள் - அவள்
கல்லிகள் கொண்டிங்கு வந்தனை! - அவள்

கிள்ளை மொழியின் நலத்தையே - இங்குக்
கேட்க விரும்புமென் உள்ளமே. (109)

வேண்டிய கேள்விகள் கேட்கலாம் - சொல்ல
வேண்டிய வார்த்தைகள் சொல்லலாம் - மன்னர்
நீண்ட பெருஞ்சபை தன்னிலே - அவள்
நேரிடவே வந்த பின்புதான்! - சிறு
கூண்டிற் பறவையுமல்லளே! - ஐவர்
கூட்டு மனைவிக்கு நாணமேன்? - சின
மூண்டுக் கடுஞ்செயல் செய்யுமுன் - அந்த
மொய்குழ லாளைஇங் கிட்டுவா. (110)

மன்னன் அழைத்தனன் என்றுநீ - சொல்ல
மாறி அவளொன்று சொல்வதோ? - உன்னைச்
சின்னமுறச் செய்குவேனடா - கணஞ்
சென்ற வளைக்கொணர் வாய்என்றான் - அவன்
சொன்ன மொழியினைப் பாகன்போய் - அந்தத்
தோகைமுன் கூறி வணங்கினான் - அவள்
இன்னல் விளைந்திவை கூறுவாள் - தம்பி,
என்றனை வீணில் அழைப்பதேன்? (111)

திரௌபதி சொல்வது

நாயகர் தாம்தமைத் தோற்றபின் - என்னை
நல்கும் உரிமை அவர்க்கில்லை - புலைத்
தாயத்திலே விலைப் பட்டபின் - என்ன
சாத்திரத்தால் என்னைத் தோற்றிட்டார் - அவர்
தாயத்திலே விலைப்பட்டவர் - புவி
தாங்கும் துருபதன் கன்னிநான் - நிலை
சாயப்புலைத் தொண்டு சார்ந்திட்டால் - பின்பு
தாரமுடைமை அவர்க்குண்டோ? (112)

கௌரவ வேந்தர் சபைதன்னில் - அறங்
கண்டவர் யாவரும் இல்லையோ? - மன்னர்
சௌரியம் வீழ்ந்திடு முன்னரே - அங்குச்
சாத்திரம் செத்துக் கிடக்குமோ? - புகழ்
ஒவ்வுற வாய்ந்த குருக்களும் - கல்வி
ஓங்கிய மன்னரும் சூதிலே - செல்வம்
வவ்வுறல் தாம்கண்டிருந்தனர் - என்றன்
மானம் அழிவதும் காண்பரோ? (113)

இன்பமும் துன்பமும் பூமியின் - மிசை
யாருக்கும் வருவது கண்டனம் - எனில்
மன்பதை காக்கும் அரசர்தாம் - அற

மாட்சியைக் கொன்று களிப்பரோ - அதை
அன்பும் தவமும் மிக்குளோர் - தலை
அந்தணர் கண்டு களிப்பரோ - அவர்
முன்பென் வினாவினை மீட்டும்போய்ச் - சொல்லி
முற்றும் தெளிவுறக் கேட்டுவா. (114)

என்றந்தப் பாண்டவர் தேவியும் - சொல்ல
என்செய்வான் ஏழையப் பாகனே- என்னைக்
கொன்றுவிட் டாலும் பெரிதில்லை - இவள்
கூறும் வினாவிற் கவர்விடை - தரின்
அன்றி இவளை மறுமுறை - வந்து
அழைத்திட நானங் கிசைந்திடேன் - என
நன்று மனத்திடைக் கொண்டவன் - சபை
நண்ணி நிகழ்ந்தது கூறினான். (115)

மாத விடாயி லிருக்கிறாள் - அந்த
மாதரசென்பதும் கூறினான் - கெட்ட
பாதகன் நெஞ்ச மிளகிடான் - நின்ற
பாண்டவர் தம்முக நோக்கினான் - அவர்
பேதுற்று நிற்பது கண்டனன் - மற்றும்
பேரவை தன்னில் ஒருவரும் - இவன்
தீதுற்ற சிந்தை தடுக்கவே - உள்ளத்
திண்மை இல்லாதங் கிருந்தனர். (116)

பாகனை மீட்டும் சினத்துடன் - அவன்
பார்த்திடி போலுரை செய்கின்றான் - பின்னும்
ஏகி நமதுள்ளம் கூறடா - அவள்
ஏழு கணத்தில் வரச்செய்வாய்! - உன்னைச்
சாக மிதித்திடு வேனடா! - என்று
தார்மன்னன் கூறிடப் பாகனும் - மன்னன்
வேகந் தன்னைப் பொருள் செய்திடான் - அங்கு
வீற்றிருந்தோர் தமை நோக்கியே, (117)

சீறும் அரசனுக் கேழையேன் - பிழை
செய்த துண்டோ அங்குத் தேவியார் - தமை
நூறு தரம்சென் றழைக்கினும் - அவர்
நுங்களைக் கேட்கத் திருப்புவார் - அவர்
ஆறுதல் கொள்ள ஒருமொழி - சொல்லில்
அக்கணமே சென்றழைக்கிறேன் -மன்னன்
கூறும் பணிசெய்ய வல்லன்யான் - அந்தக்
கோதை வராவிடில் என்செய்வேன்? (118)

துரியோதனன் சொல்வது

பாகனு ரைத்தது கேட்டனன் - பெரும்
பாம்புக் கொடியவன் சொல்கிறான் - அவள்
பாகன் அழைத்திட வருகிலள் - இந்தப்
பையலும் வீமனை அஞ்சியே - பல
வாகத் திகைப்புற்று நிற்கிறான் - இவன்
அச்சத்தைப் பின்பு குறைக்கிறேன் - தம்பீ!
போகக் கடவை இப்போதங்கே - இங்கப்
பொற்றொடி யோடும் வருகநீ! (119)

பாஞ்சாலி சபதத்தில் நான்காவது துகிலுரிதல் சருக்கம் முற்றிற்று

ஐந்தாவது

சபதச் சருக்கம்

துச்சாதனன் திரௌபதியை ஸபைக்குக் கொணர்தல்

இவ்வுரை கேட்ட துச்சாதனன் - அண்ணன்
இச்சையை மெச்சி எழுந்தனன் - இவன்
செவ்வி சிறிது புகலுவாம் - இவன்
தீமையில் அண்ணனை வென்றவன் - கல்வி
எவ்வள வேனும் இலாதவன் - கள்ளும்
ஈரக்* கறியும் விரும்புவோன் - பிற
தெவ்வர் இவன்தனை அஞ்சுவர் - தன்னைச்
சேர்ந்தவர் பேயென்று ஒதுங்குவார். (120)

*ஈரற் கறி - தேசிக விநாயகம் பிள்ளை

புத்தி விவேகமில்லாதவன் - புலி
போல உடல்வலி கொண்டவன் - கரை
தத்தி வழியும் செருக்கினால் - கள்ளின்
சார்பின்றியே வெறி சான்றவன் - அவ
சக்தி வழி பற்றி நிற்பவன் - சிவ
சக்தி நெறியுணராதவன் - இன்பம்
நத்தி மறங்கள் இழைப்பவன் - என்றும்
நல்லவர் கேண்மை விலக்கினோன். (121)

அண்ணன் ஒருவனை அன்றியே - புவி
அத்தனைக் கும்தலை ஆயினோம் - என்ற
எண்ணம் தனதிடைக் கொண்டவன் - அண்ணன்
ஏது சொன்னாலு மறுத்திடான் - அருட்
கண்ணழி வெய்திய பாதகன் - அந்தக்
காரிகை தன்னை அழைத்துவா - என்றவ்
அண்ணனுரைத்தது கேட்டனன் - நல்ல
தாம்என் றுறுமி எழுந்தனன். (122)

பாண்டவர் தேலி இருந்ததோர் - ஒளிப்
பைங்கதிர் மாளிகை சார்ந்தனன் - அங்கு
நீண்ட துயரில் குலைந்து போய் - நின்ற
நேரிழை மாதினைக் கண்டனன் - அவள்
தீண்டலை எண்ணி ஒதுங்கினாள் - அடி,
செல்வதெங்கே என்றிரைந்திட்டான் - இவன்
ஆண்டகை இல்லாப் புலையன்என் - றவள்
அச்சமில்லாதெதிர் நோக்கியே (123)

திரௌபதிக்கும் துச்சாதனனுக்கும் ஸம்வாதம்

தேவர் புவிமிசைப் பாண்டவர் - அவர்
தேவி துருபதன் கன்னிநான் - இதை
யாவரும் இற்றை வரையிலும் - தம்பி
என்முன் மறந்தவர் இல்லைகாண் - தம்பி
காவல் இழந்த மதிகொண்டாய் - தம்பி
கட்டுத் தவறி மொழிகிறாய் - தம்பி
நீவந்த சேதி விரைவிலே - சொல்லி
நீங்குக என்றனள் பெண்கொடி. (124)

பாண்டவர் தேவியுமல்லைநீ - புகழ்ப்
பாஞ்சாலத்தான் மகளல்லைநீ - புவி
ஆண்டருள் வேந்தர் தலைவனாம் - எங்கள்
அண்ணனுக்கே அடிமைச்சிநீ - மன்னர்
நீண்ட பெருஞ்சபை தன்னிலே - எங்கள்
நேசச் சகுனியோடாடியங் - குன்னைத்
தூண்டும் பணய மெனவைத்தனன் - இன்று
தோற்றுவிட்டான் தருமேந்திரன். (125)

ஆடி விலைப்பட்ட தாதிநீ - உன்னை
ஆள்பவன் அண்ணன் சுயோதனன் - மன்னர்
கூடி இருக்கும் சபையிலே - உன்னைக்
கூட்டி வருகென்று மன்னவன் - சொல்ல
ஓடி வந்தேன் இதுசெய்திகாண் - இனி
ஒன்றுஞ் சொல்லா தென்னொ டேகுவாய் - அந்தப்
பேடி மகன்ஒரு பாகன்பால் - சொன்ன
பேச்சுக்கள் வேண்டிலன் கேட்கவே. (126)

வேறு

துச்சா தனதினைச் சொல்லினான். பாஞ்சாலி
அச்சா, கேள். மாதவிலக் காதலல் ஓராடை (127)

தன்னி லிருக்கிறேன். தார்வேந்தர் பொற்சபைமுன்
என்னை அழைத்தல் இயல்பில்லை. அன்றியுமே (128)

சோதரர்தம் தேவிதனைச் சூதில் வசப்படுத்தி
ஆதரவு நீக்கி அருமை குலைத்திடுதல் (129)

மன்னர் குலத்து மரபோகாண்? அண்ணன்பால்
என்நிலைமை சொல்லிடுவாய் ஏகுகநீ என்றிட்டாள் (130)

கக்கக்க வென்று கனைத்தே பெருமூடன்
பக்கத்தில் வந்தேயப் பாஞ்சாலி கூந்தலினை (131)

கையினாற் பற்றிக் கரகரெனத் தானிழுத்தான்
ஐயகோ என்றே அலறி உணர்விழந்து (132)

பாண்டவர்தம் தேவியவள் பாதியுயிர் கொண்டுவர
நீண்ட கருங்குழலை நீசன் கரம்பற்றி (133)

முன்னிழுத்துச் சென்றான். வழிநெடுக மொய்த்தவராய்
என்ன கொடுமை யிதுவென்று பார்த்திருந்தார். (134)

ஊரவர்தம் கீழ்மை உரைக்கும் தரமாமோ?
வீரமில்லா நாய்கள் விலங்கா மிளவரசன் (135)

தன்னை மிதித்துத் தராதலத்தில் போக்கியே
பொன்னைஅவள் அந்தப் புரத்தினிலே சேர்க்காமல் (136)

நெட்டை மரங்களென நின்று புலம்பினார்.
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ? (137)

பேரழகு கொண்ட பெருந்தவத்து நாயகியைச்
சீரழியக் கூந்தல் சிதையக் கவர்ந்துபோய்க் (138)

கேடுற்ற மன்னரறங் கெட்ட சபைதனிலே
கூடுதலும் அங்கேபோய்க் கோவென் றலறினாள். (139)

விம்மி அழுதாள் விதியோ, கணவரே
அம்மி மிதித்து அருந்ததியைக் காட்டியெனை (140)

வேதச் சுடர்த்தீமுன் வேண்டி மணஞ்செய்து
பாதகர்முன் இந்நாள் பரிசழிதல் காண்பீரோ? (141)

என்றாள். விஜயனுடன் ஏறுதிறல் வீமனுமே
குன்றா மணித்தோள் குறிப்புடனே நோக்கினார். (142)

தருமனுமற் றாங்கே தலைகுனிந்து நின்றிட்டான்.
பொருமியவள் பின்னும் புலம்புவாள் வான்சபையில் (143)

கேள்வி பலவுடையோர் கேடிலா நல்லிசையோர்
வேள்வி தவங்கள் மிகப்புரிந்த வேதியர்கள் (144)

மேலோ ரிருக்கின்றார் வெஞ்சினமேன் கொள்கிலரோ?

வேலோர் எனையுடைய வேந்தர் பிணிப்புண்டார். (145)

இங்கிவர்மேல் குற்றம் இயம்ப வழியில்லை
மங்கியதோர் புன்மதியாய்! மன்னர் சபைதனிலே (146)

என்னைப் பிடித்திழுத்தே ஏச்சுக்கள் சொல்லுகிறாய்
நின்னை எவரும் நிறுத்தடா என்பதிலர் (147)

என்செய்கேன்! என்றே இரைந்தழுதாள். பாண்டவரை
மின்செய்த கதிர்விழியால் வெந்நோக்கு நோக்கினாள். (148)

மற்றவர்தா முன்போல் வாயிழந்து சீர்குன்றிப்
பற்றைகள்போல் நிற்கப் பார்த்து, வெறிகொண்டு (149)

தாதியடி தாதி!எனத் துச்சாதனன் அவளைத்
தீதுரைகள் கூறினான். கர்ணன் சிரித்தான் (150)

சகுனி புகழ்ந்தான். சபையினோர்? வீற்றிருந்தார்!
தகுதியுயர் வீட்டுமனும் சொல்லுகிறான் தையலே, (151)

வீட்டுமாசார்யன் சொல்வது

சூதாடி உன்னை யுதிட்டிரனே தோற்றுவிட்டான்
வாதாடி நீயவன்றன் செய்கை மறுக்கின்றாய் (152)

சூதிலே வல்லான் சகுனி தொழில்வலியால்
மாதரசே நின்னுடைய மன்னவனை வீழ்த்திவிட்டான் (153)

மற்றிதனில் உன்னைஒரு பந்தயமா வைத்ததே
குற்றமென்று சொல்லுகிறாய் கோமகளே, பண்டையுக (154)

வேத முனிவர் விதிப்படி நீசொல்லுவது
நீதமெனக் கூடும். நெடுங்காலச் செய்தியது! (155)

ஆணொடுபெண் முற்றும் நிகரெனவே அந்நாளில்
பேணிவந்தார். பின்னாளில் இஃது பெயர்ந்துபோய் (156)

இப்பொழுதை நூல்களினை எண்ணுங்கால், ஆடவருக்கு
ஒப்பில்லை மாதர். ஒருவன்தன் தாரத்தை (157)

விற்றிடலாம். தானமென வேற்றுவர்க்குத் தந்திடலாம்
முற்றிலுமே விலங்கு முறைமையன்றி வேறில்லை. (158)

தன்னை அடிமையென விற்றபின் னுந்தருமன்

நின்னை அடிமையெனக் கொள்வதற்கு நீதியுண்டு. (159)

செல்லு நெறியறியார் செய்கையிங்குப் பார்த்திடிலோ
கல்லு நடுங்கும் விலங்குகளும் கண்புதைக்கும். (160)

செய்கை அநீதிஎன்று தேர்ந்தாலும் சாத்திரந்தான்
வைகும் நெறியும் வழக்கமு நீகேட்பதனால் (161)

ஆங்கவையும் நின்சார்பில் ஆகா வகை யுரைத்தேன்.
தீங்கு தடுக்கும் திறமிலேன்! என்றந்த (162)

மேலோன் தலைகவிழ்ந்தான். மெல்லியளும் சொல்லுகிறாள்

திரௌபதி சொல்லுவது

சாலநன்கு கூறினீர் ஐயா, தருமநெறி (163)

பண்டோர் இராவணனும் சீதைதன்னைப் பாதகத்தால்
கொண்டோர் வனத்திடையே வைத்துப்பின் கூட்டமுற (164)

மந்திரிகள் சாத்திரிமார் தம்மை வரவழைத்தே
செந்திருவைப் பற்றிவந்த செய்தி உரைத்திடுங்கால் (165)

தக்கதுநீர் செய்தீர் தருமத்துக் கிச்செய்கை
ஒக்கும் எனக்கூறி உகந்தனராம் சாத்திரிமார் (166)

பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள்
மாய முணராத மன்னவனைச் சூதாட (167)

வற்புறுத்திக் கேட்டதுதான் வஞ்சனையோ நேர்மையோ?
முற்படவே சூழ்ந்து முடித்ததொரு செய்கையன்றோ? (168)

மண்டபம்நீர் கட்டியது மாநிலத்தைக் கொள்ளவன்றோ?
பெண்டிர் தமையுடையீர் பெண்களுடன் பிறந்தீர் (169)

பெண்பாவம் அன்றோ பெரியவசை கொள்வீரோ?
கண்பார்க்க வேண்டும்என்று கையெடுத்துக் கும்பிட்டாள். (170)

அம்புபட்ட மான்போல் அழுது துடிதுடித்தாள்.
வம்புமலர்க் கூந்தல் மண்மேல் புரண்டுவிழ (171)

தேவி கரைந்திடுதல் கண்டே சிலமொழிகள்
பாவிதுச் சாதனனும் பாங்கிழந்து கூறினான். (172)

வேறு

ஆடை குலைவுற்று நிற்கிறாள் - அவள்
ஆவென் றழுது துடிக்கிறாள் - வெறும்
மாடு நிகர்த்த துச்சாதனன் - அவள்
மைக்குழல் பற்றி இழுக்கிறான் - இந்தப்
பீடையை நோக்கினன் வீமனும் - கரை
மீறிஎழுந்தது வெஞ்சினம் - துயர்
கூடித் தருமனை நோக்கியே - அவன்
கூறிய வார்த்தைகள் கேட்டிரோ (173)

வேறு

வீமன் சொல்வது

சூதர் மனைகளிலே - அண்ணே
தொண்டு மகளிருண்டு
சூதிற் பணயமென்றே - அங்கொரு
தொண்டச்சி போவதில்லை. (174)

ஏது கருதிவைத்தாய் - அண்ணே
யாரைப் பணயம் வைத்தாய்?
மாதர் குலவிளக்கை - அன்பே
வாய்ந்த வடிவழகை (175)

பூமி யரசரெல்லாம் - கண்டே
போற்ற விளங்குகிறான்
சாமி புகழினுக்கே - வெம்போர்
சண்டனப் பாஞ்சாலன் (176)

அவன்சுடர் மகளை - அண்ணே
ஆடி இழந்து விட்டாய்
தவறு செய்துவிட்டாய் - அண்ணே
தருமங் கொன்று விட்டாய், (177)

சோரத்தில் கொண்டதில்லை - அண்ணே
சூதில் படைத்ததில்லை.
வீரத்தினால் படைத்தோம் - வெம்போர்
வெற்றியினால் படைத்தோம். (178)

சக்கர வர்த்தியென்றே - மேலாம்
தன்மை படைத்திருந்தோம்
பொக்கென ஓர்கணத்தே - எல்லாம்
போகத் தொலைத்துவிட்டாய். (179)

நாட்டை யெல்லாம் தொலைத்தாய் - அண்ணே
நாங்கள் பொறுத்திருந்தோம்.
மீட்டும் எமையடிமை - செய்தாய்
மேலும் பொறுத்திருந்தோம். (180)

துருபதன் மகளைத் - திட்டத்
துய்மன் உடன்பிறப்பை
இருபகடை என்றாய் - ஐயோ
இவர்க் கடிமை என்றாய். (181)

இதுபொறுப்ப தில்லை - தம்பி
எரிதழல் கொண்டுவா.
கதிரை வைத்திழந்தான் - அண்ணன்
கையை எரித்திடுவோம். (182)

வேறு

விஜயன் வீமனுக்குச் சொல்வது

எனவீமன் சஹதேவன் இடத்தே சொன்னான்
இதுகேட்டு வில்விஜயன் எதிர்த்துச் சொல்வான்
மனமாரச் சொன்னாயோ வீமா என்ன
வார்த்தைசொன்னாய்? எங்குசொன்னாய்? யாவர் முன்னே?
கனமாரும் துருபதனார் மகளைச் சூதுக்
களியினிலே இழந்திடுதல் குற்றம் என்றாய்.
சினமான தீஅறிவைப் புகைத்த லாலே
திரிலோக நாயகனைச் சினந்து சொன்னாய். (183)

தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்
தருமம்மறு படிவெல்லும் எனுமி யற்கை
மருமத்தை நம்மாலே உலகங் கற்கும்
வழிதேடி விதிஇந்தச் செய்கை செய்தான்
கருமத்தை மேன்மேலும் காண்போம் இன்று
கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்
தனுஉண்டு காண்டீவம் அதன்பேர் என்றான். (184)

அண்ணனுக்குத் திறல்வீமன் வணங்கி நின்றான்
அப்போது விகர்ணன்எழுந் துஅவைமுன் சொல்வான்

விகர்ணன் சொல்வது

பெண்ணரசி கேள்விக்குப் பாட்டன் சொன்ன

பேச்சதனை நான்கொள்ளேன் பெண்டிர் தம்மை
எண்ணமதில் விலங்கெனவே கணவ ரெண்ணி
ஏதெனினும் செய்திடலாம் என்றான் பாட்டன்
வண்ணமுயர் வேதநெறி மாறிப் பின்னால்
வழங்குவதின் நெறியென்றான் வழுவே சொன்னான். (185)

எந்தையர்தம் மனைவியரை விற்ற துண்டோ?
இதுகாறும் அரசியரைச் சூதில் தோற்ற
விந்தையைநீர் கேட்டதுண்டோ? விலைமாதர்க்கு
விதித்ததையே பிற்கால நீதிக் காரர்
சொந்தமெனச் சாத்திரத்தில் புகுத்தி விட்டார்
சொல்லளவே தானாலும் செய்கை தன்னில்
இந்தவிதம் செய்வதில்லை. சூதர் வீட்டில்
ஏவற்பெண் பணயமில்லை என்றும் கேட்டோம். (186)

தன்னையிவன் இழந்தடிமை ஆன பின்னால்
தாரமேது வீடேது தாத னான
பின்னரும்ஓர் உடைமை உண்டோ என்றே நம்மை
பெண்ணரசு கேட்கின்றார் பெண்மை வாயால்
மன்னர்களே களிப்பதுதான் சூதென் றாலும்
மனுநீதி துறந்திங்கே வலிய பாவம்
தன்னையிரு விழிபார்க்க வாய்பே சீரோ
தாத்தனே நீதியிது தகுமோ என்றான். (187)

இவ்வாறு விகர்ணனும் உரைத்தல் கேட்டார்
எழுந்திட்டார் சிலமன்னர் இரைச்சல் இட்டார்
ஒவ்வாது சகுனிசெய்யும் கொடுமை என்பார்
ஒருநாளும் உலகிதனை மறக்கா தென்பார்
எவ்வாறு புகைந்தாலும் புகைந்து போவீர்
ஏந்திழையை அவைக்களத்தே இகழ்தல் வேண்டா
செவ்வானம் படர்ந்தாற்போலி ரத்தம் பாய
செருக்களத்தே தீருமடா பழியிஃ தென்பார். (188)

வேறு

கர்ணன் சொல்வது

விகருணன் சொல்லைக் கேட்டு
வில்லிசைக் கருணன் சொல்வான்
தகுமடா சிறியாய் நின்சொல்
தாரணி வேந்தர் எல்லாம்
புகுவது நன்றன் றெண்ணி
வாய்புதைந் திருந்தார் நீதான்
மிகும்உரை சொல்லி விட்டாய்

விரகிலாய், புலனுமில்லாய் (189)

பெண்ணிவள் தூண்ட லெண்ணிப் *
பசுமையால் பிதற்று கின்றாய்.
எண்ணிலா துரைக்க லுற்றாய்
இவளைநாம் வென்ற தாலே
நண்ணிடும் பாவம் என்றாய்
நாணிலாய் பொறையு மில்லாய்.
கண்ணிய நிலைமை ஓராய்
நீதிநீ காண்ப துண்டோ? (190)

*எல்லாப் பதிப்புகளிலும் தூண்டல் என்றே இருக்கிறது. தீண்டலெண்ணி என்றிருத்தல் பொருத்தமாக இருக்கும். திருநெல்வேலிப் பகுதியினர் மாத விலக்கைத் தீண்டல் என்று சொல்வர். பாரதியும் அவள் "தீண்டலை எண்ணி ஒதுங்கினாள்" (பாடல் 123) என்று சொல்வதைக் காணலாம்.

மார்பிலே துணியைத் தாங்கும்
வழக்கம் கீழடியாக் கில்லை.
சீரிய மகளும் அல்லள்
ஐவரைக் கலந்த தேவி.
யாரடா பணியாள் வாராய்
பாண்டவர் மார்பில் ஏந்தும்
சீரையும் களைவாய் தையல்
சேலையும் களைவாய் என்றான். (191)

இவ்வுரை கேட்டார் ஐவர்
பணிமக்கள் ஏவா முன்னம்
தெவ்வர் கண்டஞ்சு மார்பைத்
திறந்தனர் துணியைப் போட்டார்.
நவ்வியைப் போன்ற கண்ணாள்
ஞான சுந்தரி பாஞ்சாலி
எவ்வகை உய்வமென்றே தியங்கினாள்
இணைக்கை கோத்தாள். (192)

வேறு

துகிலுரிதல்
திரௌபதி கண்ணனுக்குச் செய்யும் ப்ரார்த்தனை

துச்சா தனன்எழுந்தே - அன்னை
துகிலினை மன்றிடை உரிதலுற்றான்.
அச்சோ, தேவர்களே! என்று
அலறிஅவ் விதுரனும் தரைசாய்ந்தான்.
பிச்சேறி யவனைப்போல் - அந்தப்

பேயனும் துகிலினை உரிகையிலே
உட்சோதியில் கலந்தாள் - அன்னை
உலகினை மறந்தாள் ஒருமையுற்றாள். (193)

ஹரிஹரி ஹரிஎன்றாள் - கண்ணா
அபயம் அபயம் உனக்கபயம் என்றாள்.
கரியினுக் கருள்புரிந்தே - அன்று
கயத்திடை முதலையின் உயிர்மடித்தாய்.
கரியநன் நிறமுடையாய் - அன்று
காளிங்கன் தலைமிசை நடம்புரிந்தாய்.
பெரியதொர் பொருளாவாய் - கண்ணா
பேசரும் பழமறைப் பொருளாவாய். (194)

சக்கர மேந்திநின்றாய் - கண்ணா,
சார்ங்கம்என் றொருவில்லைக் கரத்துடையாய்!
அக்ஷரப் பொருளாவாய் - கண்ணா
அக்கார அமுதுண்ணும் பசுங்குழந்தாய்!
துக்கங்கள் அழித்திடுவாய் - கண்ணா
தொண்டர் கண்ணீர்களைத் துடைத்திடுவாய்.
தக்கவர் தமைக்காப்பாய் - அந்தச்
சதுர்முக வேதனைப் படைத்துவிட்டாய். (195)

வானத்துள் வானாவாய் - தீ,
மண்நீர் காற்றினில் அவையாவாய்.
மோனத்துள் வீழ்ந்திருப்பார் - தவ
முனிவர்தம் அகத்தினில் ஒளிர்தருவாய்.
கானத்துப் பொய்கையிலே - தனிக்
கமலமென் பூமிசை வீற்றிருப்பாள்
தானத்து ஸ்ரீதேவி - அவள்
தாளிணை கைக்கொண்டு மகிழ்ந்திருப்பாய்! (196)

ஆதியில் ஆதியப்பா, - கண்ணா
அறிவினைக் கடந்தவிண் ணகப்பொருளே
சோதிக்குச் சோதியப்பா, - என்றன்
சொல்லினைக் கேட்டருள் செய்திடுவாய்!
மாதிக்கு வெளியினிலே - நடு
வானத்தில் ஊர்ந்திடும் கருடன்மிசை
சோதிக்குள் ஊர்ந்திடுவாய் - கண்ணா
சுடர்ப் பொருளே பேர்அடர்ப் பொருளே! (197)

கம்பத்தி லுள்ளானோ - அடா
காட்டுன்றன் கடவுளைத் தூணிடத்தே!
வம்புரை செயுமூடா - என்று
மகன்மிசை உறுமியத் தூணுதைத்தான்

செம்பவிர் குழலுடையான் - அந்தத்
தீயவல் இரணியன் உடல்பிளந்தாய்!
நம்பிநின் அடிதொழுதேன் - என்னை
நாணழியா திங்குக் காத்தருள்வாய். (198)

வாக்கினுக் கீசனையும் - நின்றன்
வாக்கினில் அசைத்திடும் வலிமையினாய்!
ஆக்கினை கரத்துடையாய் - என்றன்
அன்புடை எந்தைஎன் அருட்கடலே!
நோக்கினில் கதிருடையாய் - இங்கு
நூற்றுவர் கொடுமையைத் தவிர்த்தருள்வாய்.
தேக்குநல் வானமுதே - இங்கு
சிற்றிடை ஆய்ச்சியில் வெண்ணெய்உண்டாய்! (199)

வையகம் காத்திடுவாய்! - கண்ணா!
மணிவண்ணா என் மனச்சுடரே!
ஐயநின் பதமலரே - சரண்
ஹரிஹரி ஹரிஹரி ஹரிஎன்றாள்.
பொய்யர்தம் துயரினைப்போல் - நல்ல
புண்ணிய வாணர்தம் புகழினைப்போல்
தையலர் கருணையைப்போல் - கடல்
சலசலத் தெறிந்திடும் அலைகளைப்போல் (200)

பெண்ணொளி வாழ்த்திடுவார் - அந்தப்
பெருமக்கள் செல்வத்தில் பெருகுதல்போல்
கண்ணபிரான் அருளால் - தம்பி
கழற்றிடக் கழற்றிடத் துணிபுதிதாய்
வண்ணப்பொன் சேலைகளாம் - அவை
வளர்ந்தன வளர்ந்தன வளர்ந்தனவே!
எண்ணத்தில் அடங்காவே - அவை
எத்தனை எத்தனை நிறத்தனவோ! (201)

பொன்னிழைப் பட்டிழையும் - பல
புதுப்புதுப் புதுப்புதுப் புதுமைகளாய்
சென்னியில் கைகுவித்தாள் - அவள்
செவ்விய மேனியைச் சார்ந்துநின்றே,
முன்னிய ஹரிநாமம் - தன்னில்
மூளுநற் பயன்உல கறிந்திடவே,
துன்னிய துகிற்கூட்டம் - கண்டு
தொழும்பத் துச்சாதனன் வீழ்ந்துவிட்டான். (202)

தேவர்கள் பூச்சொரிந்தார் - ஓம்
ஜெயஜெய பாரதசக்தியென்றே
ஆவலோடெழுந்து நின்றே - முன்னை

ஆரிய வீட்டுமன் கைதொழுதான்.
சாவடி மறவர் எல்லாம் - ஓம்
சக்திசக்தி சக்தி என்று கைகுவித்தார்.
காவலின் நெறி பிழைத்தான் - கொடி
கடிஅரவுடையவன் தலைகவிழ்ந்தான். (203)

வேறு

வீமன் செய்த சபதம்

வீமன் எழுந்துரை செய்வான் - இங்கு
விண்ணவர் ஆணை பராசக்தியாணை
தாமரைப் பூவினில் வந்தான் - மறை
சாற்றிய தேவன் கண்ணன் கழலாணை
மாமகளைக் கொண்ட தேவன் - எங்கள்
மரபுக்குத் தேவன் கண்ணன் கழலாணை
காமனைக் கண்ணழலாலே - சுட்டுக்
காலனை வென்றவன் பொன்னடிமீதில் (204)

ஆணையிட் டிஃதுரை செய்வேன் - இந்த
ஆண்மை யிலாத் துரியோதனன் தன்னை
பேணும் பெருங்கனல் ஒத்தாள் - எங்கள்
பெண்டு திரௌபதியைத் தொடைமீதில்
நாணின்றி வந்திரு என்றான் - இந்த
நாய்மகனாம் துரியோதனன் தன்னை
மாணற்ற மன்னர்கள் முன்னே - என்றன்
வன்மையினால் யுத்த ரங்கத்தின் கண்ணே (205)

தொடையைப் பிளந்துயிர் மாய்ப்பேன் - தம்பி
சூரத் துச்சாதனன் தன்னையும்ஆங்கே
கடைப்பட்ட தோள்களைப் பிய்ப்பேன் - அங்குக்
கள்ளென ஊறும் இரத்தம் குடிப்பேன்
நடைபெறும் காண்பீர் உலகீர் - இது
நான்சொலும் வார்த்தைஎன் றெண்ணிடல் வேண்டா!
தடையற்ற தெய்வத்தின் வார்த்தை - இது
சாதனை செய்கபரா சக்தி என்றான். (206)

அர்ஜுனன் சபதம்

பார்த்தன் எழுந்துரை செய்வான் - இந்தப்
பாதகக் கர்ணனை போரில் மடிப்பேன்.
தீர்த்தன் பெரும்புகழ் விஷ்ணு - எங்கள்
சீரிய நண்பன் கண்ணன் கழலாணை
கார்த்தடங் கண்ணிஎன் தேவி - அவள்

கண்ணிலும் காண்டிவ வில்லினும் ஆணை
போர்த்தொழில் விந்தைகள் காண்பாய் - ஹே!
பூதலமே அந்தப் போதினில் என்றான். (207)

பாஞ்சாலி சபதம்

தேவி திரௌபதி சொல்வாள் - ஓம்
தேவி பராசக்தி ஆணைஉரைத்தேன்
பாவி துச்சாதனன் செந்நீர் - அந்தப்
பாழ்த்துரி யோதனன் ஆக்கை இரத்தம்
மேவி இரண்டும் கலந்தே - குழல்
மீதினிற் பூசி நறுநெய் குளித்தே
சீவிக் குழல்முடிப்பேன் - இது
செய்யுமுன்னே முடியேன் என்றுரைத்தாள். (208)

ஓமென் றுரைத்தனர் தேவர் - ஓம்
ஓமென்று சொல்லி உறுமிற்று வானம்.
பூமி அதிர்ச்சி உண்டாச்சு - விண்ணைப்
பூழிப் படுத்தியதாம் சுழற்காற்று.
சாமி தருமன் புவிக்கே - என்று
சாட்சி உரைத்தன பூதங்கள் ஐந்தும்.
நாமும் கதைமுடித்தோம் - இந்த
நானில முற்றுநல் லின்பத்தில் வாழ்க! (209)

யாப்பியல் பாகுபாடு

பாடல் எண்	பாகுபாடு
முதற்பாகம்	
1 -- 18	நொண்டிச் சிந்து
19	கட்டளைக் கலிப்பா
20 -- 37	நொண்டிச் சிந்து
38 -- 41	கட்டளைக் கலிப்பா
42 -- 49	சிந்து (ஈரடி பதினொரு சீர்)
50 -- 52	சிந்து (நாலடி 18 சீர்)
53 -- 83	சிந்து (நாலடி எண்சீர்)
84 -- 85	கட்டளைக் கலிப்பா
86 -- 91	சிந்து (நாலடி எண்சீர்)
92 -- 96	சிந்து (நாலடி அறுசீர்)
97 -- 100	கட்டளைக் கலிப்பா
101	சிந்து
102 -- 106	சிந்து
107 -- 108	சிந்து
109 -- 114	கட்டளைக் கலிப்பா
115 -- 118	எண்சீர் விருத்தம்
119 -- 127	கட்டளைக் கலிப்பா
128 -- 135	சிந்து
136 -- 142	சிந்து (நாலடிச் சீர்)
143 -- 151	எண்சீர் விருத்தம்
152	நிலைமண்டில ஆசிரியப்பா
153	சிந்து (நாலடி 12 சீர்)
154	அறுசீர் விருத்தம்
155 -- 157	எண்சீர் விருத்தம்
158 -- 170	சிந்து (நாலடிச் சீர்)
171 -- 174	கட்டளைக் கலிப்பா
175 -- 177	சிந்து (நாலடி அறுசீர்)
178 -- 182	கட்டளைக் கலிப்பா
183 -- 195	சிந்து (நாலடி எண்சீர்)
196 -- 204	கட்டளைக் கலிப்பா
இரண்டாம் பாகம்	
1	எழுசீர் விருத்தம்
2	அறுசீர் விருத்தம்
3	எண்சீர் விருத்தம்

4 -- 8	சிந்து (நாலடி எழுசீர்)
9 -- 13	எண்சீர் விருத்தம்
14 -- 17	சிந்து (நாலடி எழுசீர்)
18 -- 19	சிந்து (நாலடி அறுசீர்)
20 - 24	சிந்து (நாலடி எழுசீர்)
25 -- 38	சிந்து (நாலடி எண்சீர்)
39 -- 40	சிந்து (நாலடி அறுசீர்)
41 -- 47	சிந்து (நாலடி ஐஞ்சீர்)
48 -- 108	கண்ணிகள்
109 -- 126	சிந்து (நாலடி எண்சீர்)
127 -- 172	கண்ணிகள்
173	சிந்து (நாலடி எண்சீர்)
174 -- 182	சிந்து (ஈரடி ஐஞ்சீர்)
183 -- 188	எண்சீர் விருத்தம்
189 -- 192	அறுசீர் விருத்தம்
193 -- 203	சிந்து (நாலடி அறுசீர்)
204 -- 209	சிந்து (நாலடி எண்சீர்)

****